வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 04.11.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 331 | பக்கங்கள் : 16




# பூநகரியில் சிமெந்து தொழிற்சாலை; ரோக்கியோ நிறுவனம் திட்டவரைவு



கிளிநொச்சி, நவம்பர் 04

**பூநகரி - பொன்னாவெளியில் சிமெந்து தொழிற்சாலையை நிறுவுவதற்கு முதல் கட்ட திட்ட வரைவை ரோக்கியோ சிமெந்து நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.**

இது தொடர்பில் நேற்று நடத்தப்பட்ட தெளிவூட்டல் கருத்தரங்கில் பிதேச மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். அவர்கள் ரோக்கியோ நிறுவன உயர் அதிகாரிகளிடம் தமது சந்தேகங்களையும் எதிர்பார்ப்புக்களையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்னர் மக்களின் சந்தேகங்களை தெளிவுபடுத்தும் வகையிலான அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிமெந்து தொழில்சாலை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 5 பொருட்களின் விலை குறைப்பு

கொழும்பு, நவ. 04

லங்கா சதொச விற்பனையகங்களில் முக்கிய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஒரு கிலோ வெள்ளை சீனி 22 ரூபாய் குறைந்து 238 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ கோதுமை மா 96 ரூபாயால் குறைந்து 279 ரூபாயாகவும், உள்நாட்டு ரின் மீன் 105 ரூபாயால் குறைக்கப்பட்டு 585 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தாய்லாந்து நெத்தலி ஒரு கிலோ 200 ரூபாய் குறைந்து 1,300 ரூபாயாகவும், சிவப்பு பருப்பு ஒரு கிலோ 17 ரூபாய் குறைந்து 398 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ஐ)

## கடன் வழங்குநர்களுடன் அதிகாரிகள் நேற்று பேச்சு

கொழும்பு, நவ. 04

நாட்டின் உத்தியோக பூர்வ கடன் வழங்குநர்களுக்கும் - நாட்டின் உயர் அதிகாரிகளுக்கும் இடையே நேற்று மெய்நிகர்வழியில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அனைத்து கடன் வழங்குநர்களுடனும் நியாயமான மற்றும்

15

## மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன இனியும் ஏன் போராட்டங்கள்?

### ஜனாதிபதி ரணில் கேள்வி



கொழும்பு, நவ. 04

நாட்டில் மக்கள் விரும்பிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இதற்கு பின்னரும் ஆர்ப்பாட்டங்கள் எதற்கு என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், ஆர்ப்பாட்டங்கள் மூலம் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்பதை எதிரணியினர் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறி

15

## டெங்குக்கு பெண் பலி!

யாழ்ப்பாணம், நவ. 04

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வடமராட்சி - பருத்தித்துறை - அல்வாயைச் சேர்ந்த அன்னலிங்கம் திருச்செல்வி (வயது-63) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை மாலை அவருக்கு காய்ச்சல் பீடித்துள்ளது. மறுநாள் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

மறுநாள் மேலதிக சிகிச்

15

## புலிகள் எங்களிடம் சரணடையவில்லை

### இராணுவம் மீண்டும் மறுப்பு

இறுதிப் போர் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் எருவம் தம்மிடம் சரணடையவில்லை என்று மீண்டும் மறுப்பு தெரிவித்துள்ளது இலங்கை இராணுவம்.


தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தென்னிலங்கை ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு இராணுவம் நேற்று வியாழக்கிழமை பதிலளித்தது. அந்தப் பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போர் காலத்தில் இராணுவத்திடம் சரணடைந்த - கையளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலை நீடிக்கிறது. இது தொடர்பில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் நிலையில் கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அரசாங்கமும் இராணுவமும் மறுத்து வரும் நிலையில், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட் கப்பட்டதையும் இரா ணுவம் மறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழர் பிரச்னைக்கு ஒரே தீர்வு கூட்டுசமஷ்டி அரசியல் யாப்பே

### விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 04

“தமிழர்களுக்கு இருக்கும் முக்கிய பிரச்னை அவர்களை சிங்களவர்கள் ஆளுகின்றார்கள் என்பதே. இதற்கு ஒரேயொரு தீர்வு கூட்டு சமஷ்டி முறையில் நாட்டின் அரசியல் யாப்பைத் தயாரித்து நம்மை நாமே ஆள இடமளிப்பதாகும். கிழக்கில் முஸ்லிம் மக்களின்

15

## முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் பாராளுமன்றம் மெதுவாக செயல்படுகிறது

### ஜனாதிபதி சபாநாயகருக்கு கடிதம்

கொழும்பு, நவ. 04

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் நாட்டில் நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்த முன்மொழிவுகளில்,

15

## இப்படியும் நடக்கிறது...!

எங்கள் கிராமத்தில் அரசியல் கூட்டங்கள் நடந்தால் அதில், எமது பக்கத்து வீட்டுக்காரரான நாகலிங்கம் அண்ணரும் தவறாது பேசுவார். முன்னர் தமிழ் அரசுக் கட்சி பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உள்ளூர் பேச்சாளர்களில் அவரும் ஒருவர். இப்போது இருந்திருந்தால் இப்போது மீண்டும் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளராக இருந்திருப்பார்.

முன்னரும் ஒருதடவை அவரைப்பற்றி இந்தப் பத்தியில் எழுதியதாக ஞாபகம். இருந்தாலும் இந்த விடயத்தை அறிந்தபோது இவர்தான் என் ஞாபகத்திற்கு வந்தார்.

நாகலிங்கம் அண்ணர் பேசத் தொடங்கினால், எங்களுக்கெல்லாம் அவர் என்ன சொல்லப்போகிறார் என்பதை அறிய ஆவலாக இருப்போம்.

அவர் பேச்சின் நடுவே பலமான குரலில் கேட்பார், ‘ஆயிரத்து தொழாயிரத்தி முப்பத்தி நான்கில் அமெரிக்காவில் என்ன நடந்தது....? என்பார்.

கூட்டத்தில் இருப்பவர்கள் பலமாக கைதட்டுவார்கள். சில விநாடிகளில் மீண்டும் கேட்பார், ஆயிரத்து தொழாயிரத்தி நாற்பதில் ஜப்பானில் என்ன நடந்தததுதுது...’.

மீண்டும் கைதட்டல் சத்தம் கேட்கும்.

கூட்டம் முடிந்து வீட்டுக்கு செல்லும் வழியில் நாங்கள் நாகலிங்கம் அண்ணரை இடைமறித்து கேட்போம். ‘அண்ணே அந்த அமெரிக்காவிலும் ஜப்பானிலும் என்ன நடந்தது எண்டதைச் சொல்லயில்லையே.... என்னண்ணே நடந்தது?’ என்று.

அவர் சிரித்துக்கொண்டே சொல்லுவார், ‘அது உங்களுக்கெல்லாம் விளங்காதடா தம்பியவை’ என்று. அந்தச் சம்பவம் தான் அந்தப் பேட்டியை பார்த்தபோது நினைவுக்கு வந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், பூகோள அரசியல் பற்றி கடந்த பதின்மூன்று வருடங்களுக்கு முன்னரே தாங்கள் மாத்திரமே பேசியதாகவும் அப்போது தங்களை எள்ளி நகையாடிவர்கள் இப்போது, அவர்களும் பூகோள அரசியல் பற்றி கதைப்பதாகவும் கூறியிருந்தார்.

அது என்ன பூகோள அரசியல் என்பது அவரின் அந்த ஊடக மாநாட்டில் விரிவாக சொல்லுவார் என்று காத்திருந்தேன். இலங்கையும் இப்போது பூகோள அரசியலுக்குள் சிக்குண்டு இருப்பதாகவும் சீனாவின பிடியில் இருக்கும் இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அமெரிக்காவும் இந்தியாவுமே ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிக்கு கொண்டு வந்திருப்பதாகவும் கூறினார்.

பூகோள அரசியல் அவருக்கு மாத்திரமே தெரிந்த ஒன்று என்றாலும்கூட ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவிக்காக பாராளுமன்றத்தில் தேர்தலில் நின்றபோது அவருக்கு எதிராக வாக்களிக்குமாறு கூட்டமைப்பிடம் இந்தியா கேட்டுக்கொண்டதாக அப்போது கூறப்பட்டிருந்தது. அப்படியெனில் தாம் கொண்டுவர விரும்புகின்ற ஒருவருக்கு எதிராக வாக்களிக்குமாறு இந்தியா ஏன் கூட்டமைப்பிடம் கேட்டது என்பது இந்த ஊர்க்குருவிக்கு புரியவில்லை. சிலவேளை இந்த பாழாய்ப் போன பூகோள அரசியல் அறிவு இல்லாதது காரணமாக இருக்கலாம்.

அடுத்துவரும் ஒரு வருடம், தமிழர்களுக்கு மிக முக்கியான காலம் என்று எச்சரித்த கஜேந்திரகுமார், ரணில் விக்கிரமசிங்க இந்த ஒரு வருடத்தில் இலங்கையில் ஒற்றையாட்சியுடன்கூடிய அரசியலமைப்பை கொண்டுவந்துவிடுவார் என்றும் பதின்மூன்றை உள்ளடக்கிய தீர்வை தமிழ் மக்கள் தலையில் கட்டிவிடுவார் எனவும் - எனவே, தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அத்துடன், இதற்கு எதிராக தமிழ் மக்கள் பொங்கி எழவேண்டும் என்றும் அறைகூவல் விடுத்திருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க, சில வாரங்களுக்கு முன்னர் புதிய அரசியலமைப்பை ஒரு வருடத்தில் கொண்டுவரப்போவதாக அறிவித்ததும், முண்டியடித்துக்கொண்டு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவும் அவரின் அரசியல் மாணவன் சுமந்திரனும் அதனை வரவேற்று அறிக்கை விடுத்திருந்தனர்.

அந்த அறிக்கை தொடர்பாகவும் உடனேயே ஊர்க்குருவி எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஆகக்குறைந்தது நூறுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவால் தான் கொண்டுவரவிரும்பிய அரசியலமைப்பு சட்டத்தை கொண்டவரமுடியிவில்லை. ஆனால், இப்போது ஒரேயோர் எம்.பி.யுடன் பாராளுமன்றத்தில் இருக்கும் அவரால் ஓராண்டில் புதிய அரசியலமைப்பு சட்டத்தை கொண்டுவரமுடியும் என்று நமது தலைவர்கள் நம்பவது பற்றியே அந்தப் பத்தியில் ஊர்க்குருவி கேள்வி எழுப்பியிருந்தது.

இப்போது நமது முன்னணியினரும் அதனை நம்புகின்றார்கள் என்பதை அறிந்தபோது நேற்று இந்தப் பத்தியில் எழுதியதுதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

இனி என்ன, கஜேந்திரகுமார் அழைப்பு விடுத்து விட்டார். தமிழ் மக்கள் இனி வீதிகளில் இறங்கிப் போராடப் போகின்றார்கள்.

மீண்டும் ஓர் அறகலயவை நாடு தாங்குமோ தெரியவில்லை.!

**- ஊர்க்குருவி**

# சஜித் பிரேமதாஸ இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, நவ. 04

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்னும் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு எதிராகச் சிலர் எதிர்ப்பு வெளியிட்டமை கவலையளிக்கின்றது.

சஜித் பிரேமதாஸவுடன் குறித்த தரப்பினர் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டே இந்தப் போராட்டத்தைக் கொழும்பில் முன்னெடுத்தனர். எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய நபராவார். ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவருடன் 20 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி விட்டு அவருக்கு அரசியல் அல்லது செயல்படும் முறை குறித்து கற்றுக்கொள்ளாவிட்டால் கற்றுக்கொள்வதற்கான மற்றுமொரு சந்தர்ப்பம் கிடைக்காது - என்றார்.

# மட்டுவில் பொருளாதார நிலையத்தை ஆரம்பிப்பது குறித்து அமைச்சர்கள் ஆய்வு



யாழ்ப்பாணம், நவ. 04

மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலைய கட்டுமான பணிகள் நிறைவு செய்து ஆரம்பிப்பது தொடர்பில் நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் நேற்று கள ஆய்வில் ஈடுபட்டனர்.

சுமார் 200 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 20 வர்த்தக நிலையங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள வியாபார மத்திய நிலையத்தை விவசாயிகளுக்கும் மக்களும் நன்மையளிக்கும் வகையில் வினைத்திறனாக செயல்படுத்துவது தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், கடற்றொழில் அமைச்சின் மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சின் உள்ளிட்ட அதிகாரிகள் விவசாயிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிகள் ஆகியோருடன் ஆலோசனைகளை நடத்தினர். (ஐ)



# சித்திபெற்ற மாணவிக்கு மடிக்கணனி அன்பளிப்பு

மன்னார், நவ. 04

மன்னார் சென். சேவியர் பாடசாலையில் கணித பிரிவில் தோற்றி மாவட்ட மட்டத்தில் 8ஆம் இடத்தைப் பெற்று பொறியியல் பீடத்துக்குத் தெரிவான பற்றிக் ஆனந்தகுமார் மெற்றில் பியூலா என்ற மாணவிக்கு மடிக்கணிணி அன்பளிப்பு செய்யப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் லண்டன் கிளையால் சுமார் நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான மடிக்கணிணி அவருக்கு வழங்கப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சிரேஷ்ட உபதலைவர் ராகவன், ஊடக இணைப்பாளர் இ.தயாபரன், மன்னார் மாவட்ட அமைப்பாளர் ம. யோகானந்தராசா ஆகியோர் இணைந்து மாணவியிடம் கணணியை வழங்கி வைத்தனர். (ஐ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

“தன்னால் அந்தமரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாதுஎன்றுதெரிந்தும் மரங்களைநாட்டும் முதியவர்களைக் கொண்டசமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்.”

*- கிரேக்கப் பழமொழி*

# சிகரெட் விலைக்கும் விலை சூத்திரம்?

கொழும்பு, நவ. 04

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் சிகரெட் விலையை, விலை சூத்திரத்துக்கு அமைய அதிகரிக்க முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும், ஒற்றையாக அல்லது சில்லறையாக சிகரெட் விற்பனை செய்யப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைக்கும் நோக்கிலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் புகைபிடிக்கும் வயது வந்தவர்களில் 51 சத வீதத்தினர் புகைபிடிப்பதை நிறுத்த வேண்டும் என்று நம்பக்கூடிய சாத்தியப்பாடுகள் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
04.11.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஏன் ஒன்றுபட முடியவில்லை?

தமிழ்த் தேசிய இனத்துக்கு ஒரு தேசிய இயக்கம் தேவையென்னும் அடிப்படையில்தான் எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1949இல் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார். ஆனால், அதே செல்வநாயகமே பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியை (TULF) உருவாக்கினார். ஏன் செல்வாநாயகம் அவ்வாறானதொரு முடிவை எடுத்திருந்தார்? 1970களுக்கு பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை கருத்தில் கொண்டுதான் செல்வநாயகம் அவ்வாறானதொரு முடிவை எடுத்திருந்தார். தனது அரசியல் எதிரியான ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை நாடிச் சென்றார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் தவறான பாதையில் பயணிக்கின்றார் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில்தான் செல்வநாயகம் தனியான கட்சி ஒன்றைப் பற்றியே சிந்தித்தார். தமிழ் அரசு கட்சியின் அங்குரார்ப்பண கூட்டத்தில் ஆற்றிய உரையில், இந்த விடயங்களை விபரிக்கின்றார். ஆனால், அரசியலில் புதிய நெருக்கடி ஏற்பட்டபோது, ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை நோக்கிச் செல்வதற்கு செல்வநாயகம் சிறிதும் தயங்கவில்லை. ஏனெனில், செல்வநாயகம் தன்னை முன்னிலைப்படுத்தி சிந்திக்கவில்லை. இனத்தை முன்னிறுத்தியே சிந்தித்தார். அதனால்தான் அவரால் அவ்வாறானதொரு முடிவை துணிகரமாக மேற்கொள்ள முடிந்தது.

புதிய அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கு தமிழ் அரசுக் கட்சியின் ஆற்றல் போதுமானதல்ல என்னும் பட்டறிவிலிருந்தே தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உருவாகியது. அரசியல் கட்சியென்பது ஓர் இனத்தை முன்னோக்கி வழிநடத்துவதற்கான அரசியல் ஸ்தாபனமாகும். ஓர் அரசியல் ஸ்தாபனத்தால் புதிய சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போகும்போது, தோல்வியடைந்த அரசியல் ஸ்தாபனங்களை கட்டிக்காப்பாற்றுவதில் எவ்வித பயனும் இல்லை. உண்மையில் இன்றுள்ள அரசியல் கட்சிகள் அனைத்துமே ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழலில் உருவாகியவை. புதிய அரசியல் நெருக்கடிகளை தனித்து எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலோடு எந்தவொரு கட்சியும் இல்லை. இந்த பின்னணியில்தான் ஒன்றுபட்ட வேலைத்திட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

தென்னிலங்கையில் புதிய கூட்டணிகள் தொடர்பான முயற்சிகள் தீவிரமடைந்திருக்கின்றன. ஏனெனில், எந்தவொரு கட்சியும் தனித்து அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய நிலையில் இல்லை. ராஜபக்ஷக்களின் வீழ்சியைத் தொடர்ந்து தென்னிலங்கை கட்சிகள் சிதறியிருக்கின்றன. கடந்த தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் கூட்டு வைத்துக் கொண்ட அரசியல் கட்சிகள் புதிய கூட்டணிகளுக்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலோ ஒன்றுபட்டு இயங்குவதற்கான எந்தவொரு முயற்சியும் இடம்பெறவில்லை. மேலும் பிளவடைவதற்கான சூழலே தெரிகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில் கட்சிகளாகப் பிரிந்திருப்பவர்கள் அனைவருமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சென்றவர்கள்தான். ஒரு வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் அனைவருமே ஒன்றுபடுவது இயலாத காரியமல்ல. கடந்த பதின்மூன்று வருடங்களாக இது தொடர்பில் பலவாறான முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், அந்த முயற்சிகள் எவையும் வெற்றியளிக்கவில்லை ஏன்? ஏனெனில், இனத்தின் நலன்களை விடவும் ஒவ்வொரு கட்சியின் தலைவர்களுக்கும் தங்களின் சொந்த நலன்கள் மேலாக தெரிகின்றது. சொந்த நலன்கள்மீதான வெறித்தனமான இச்சையை இருட்டடிப்பு செய்வதற்காக அவர்கள் அவ்வப்போது உச்சரித்துக் கொள்ளும் விடயம்தான் கொள்கை வாதமாகும்.

கொள்கை என்பது கருங்கல் பாறையல்ல. சூழ்நிலை சாதகமாக இருக்கின்றபோது அதனைக் கையாளுவதும் சூழ்நிலை பாதகமாக இருக்கின்றபோது இருப்பதை உச்சளவில் பயன்டுத்திக்கொண்டு வாய்ப்புகளைத் தேடுவதும்தான் ஆக்கபூர்வமான அரசியலாகும். இன்றுள்ள சூழலில் அவ்வாறானதோர் ஆக்கபூர்வமான அரசியலை முன்னெடுக்க வேண்டுமாயின் அனைத்துக் கட்சிகளும் தங்களுக்குள் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு பொது வேலைத்திட்டம் ஒன்றுக்குள் ஐக்கியப்பட வேண்டும். இன்றைய அரசியல் நெருக்கடியை ஓரளவாவது எதிர்கொள்ள வேண்டுமாயின் இதைத் தவிர வேறு வழியில்லை. ஒன்றுபட மறுத்து பிளவுகளை ஊக்குவிக்கும் அனைவருமே தமிழ் இனத்தின் எதிரிகளாவர்.

# கட்டியெழுப்ப முடியாத நாடு!

அனந்த பாலகிட்ணர்

இலங்கையின் பொருளாதார நிலை அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள நிலையில் “வங்குரோத்து அடைந்த நாடு“ என்ற அறிவிப்பும் வெளிவந்துள்ளது.

கடந்த மே மாதம் காலிமுகத்திடலில் ஆரம்பித்த ‘அறகலய’ (போராட்டம்) அரசியல் ரீதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிப்பீடத்திலிருந்து விரட்டியதோடு புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்கும் வாய்ப்பையும் வழங்கியிருந்தது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த சில மாதகால ஆட்சிகூட தற்போது பிசுபிசுத்து போயுள்ளதையே கொழும்பில் தற்போது பரவலாக இடம்பெற்று வருகின்ற ஆர்ப்பாட்டங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

கடந்த மே மாதம் அறகலய ஆரம்பமானபோது அதனை அன்று ஜனாதிபதி பதவியில் இல்லாதிருந்த ரணில் விக்கிரமசிங்க வரவேற்றிருந்தார். நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளதை அவர் ஏற்றிருந்தார். ராஜபக்ஷ குடும்பம் அரசியலிலிருந்து ஒதுங்கினால் நாட்டை கட்டி எழுப்ப முடியும் என்ற அபிப்பிராயமே பரவலாக எழுந்திருந்தது. ஆனால், தற்போது எந்த ஒரு தலைமைத்துவத்தாலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்ற நிலையே காணப்படுகின்றது.

இன்றைய சிங்கப்பூர் தலைவர்களே ஒருகாலத்தில் இலங்கையை ஒரு முன்னுதாரணமான நாடாக குறிப்பிட்டிருந்தனர். பொருளதார ரீதியாகவும் கல்வி, மற்றும் பல்வேறு துறைகளில் இலங்கை மேம்பட்டிருந்தது. ஆங்கிலக் கல்வி உன்னதமான நிலையிலிருந்தது.

ஏற்றுமதி வருமானமும் மேம்பட்டிருந்தது. ஆனால், சுதந்திர இலங்கை என்பது ‘குரங்கின் கையில் கிடைத்த பூ மாலை’ போன்ற நிலையிலேயே இருக்கின்றது.

அறுபதுகளின் இறுதிவரை இலங்கையின் பொருளாதார நிலை குறிப்பிடத்தக்கதாகவே இருந்தது. சிவில் நிர்வாகம், நீதித்துறை , சட்டம் ஒழுங்கு என்பவை ஓர் ஒழுங்கமைப்பான முறையில் இருந்தன. ஆனால், எழுபதுகளின் இறுதிப்பகுதியில் இலங்கையில் திறந்த பொருளாதார கொள்கை என்ற ரீதியில் ஏற்பட்ட மாற்றம் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதைவிட தென்னாசியாவில் இலங்கையை ஒரு குப்பைத்தொட்டி என்றழைக்குமளவுக்கு சர்வதேச சமூகத்தின் கழிவுகளை கொண்டுவந்து கொட்டும் இடமாக மாற்றிவிட்டுள்ளது.

எனவே, இலங்கை தலைவர்களின் ‘சிங்கப்பூர் கனவு’ என்பது ஒரு வாலறுந்த பட்டம் போலாகியுள்ளது.

கொழும்பில் தற்சமயம் அடிக்கடி இடம்பெற்று வருகின்ற ஆர்ப்பாட்டங்கள் இலங்கை மிகமோசமான சமூக - பொருளாதார நிலவரங்களை சந்தித்து வருவதையும் நாட்டை இக்கட்டான நிலையிலிருந்த மீட்பதற்குரிய அரசியல் ஆளுமையுள்ள தலைவர்கள் காணப்படவில்லை என்பதையுமே அறிய வைத்துள்ளன.

இத்தகைய பின்னணியிலேயே ஆர்ப்பாட்டங்களை கைவிட்டு நாட்டை கட்டியெழுப்ப முன்வாருங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கே மக்கள் தலைவர்களை தெரிவு செய்கின்றார்கள். ஆனால், ஆட்சிப்பீடமேறிய பின்னர் தமது பொறுப்புகளை உதாசீனம் செய்து விட்டு மக்களிடம் நாட்டை கட்டியெழுப்ப வாருங்கள் என்று ஆட்சிப்பொறுப்பை ஏற்றவர்கள் கூறுவது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க அறகலயவை கைவிடுமாறு கோரியுள்ளார். ஆனால், கடந்த பல மாதங்களாகவே இடம்பெற்று வருகின்ற அறகலய என்பது நாட்டு மக்களின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தி நிற்கின்றது.


உலகில் அமைதிவழி ஆர்ப்பாட்டங்களால் ஆட்சி அதிகாரங்கள் மாற்றங்கண்டுள்ளன - மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் ஆட்சி அதிகாரங்களில் இருப்போரிடம் அரசியல் - பொருளாதார ரீதியாக வெறுமையுற்ற நிலையே காணப்படுகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்குகின்ற சர்வதேச நாணய நிதியம் , உலக வங்கி ஆகியவை இலங்கையிடம் இக்கட்டான பொருளாதார நிலையிலிருந்து மீள்வதற்கான எந்தவோர் உருப்படியான பொருளாதார திட்டமும் இல்லை என்றே தெரிவித்துள்ளன. நாட்டில் உருப்படியான பொருளாதார கட்டமைப்பு இருக்க வேண்டுமாயின் ஆட்சி அதிகாரங்களில் இருப்போர் தகுந்த பொருளாதார ரீதியான அறிவு படைத்தோராக இருக்க வேண்டும்.

ஆனால், இலங்கை பாராளுமன்றத்தில் இருப்போரில் பெரும்பாலானவர்கள் போதிய கல்விப் பின்னணியைக் கொண்டிராதவர்களாக இருக்கின்றனர் என்றே அறியப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் தேசத்தின் குரலாக வெளிப்பட்டு வருகின்ற ஆர்ப்பாட்டக்காரர்களிடம் ஆட்சி அதிகாரங்களில் இருப்போரின் கையாலாகாத்தனத்தை மறைக்கும் விதத்தில் நாட்டை கட்டி எழுப்ப வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோருவது அவரை ஒரு வேடிக்கையான பேர்வழியாகவே நோக்க வைத்துள்ளது. ●

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



தமிழ்நாடு






**மேடம்**

பண வரவில் இருந்து வந்த தடை விலகும். புதிய முயற்சிகள் வேண்டாம். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். விழிப்புணர்வுடன் செயல்பட்டு உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள்.

**இடபம்**

முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். ஒரு சிலருக்கு புதிய பொறுப்பு உண்டாகும்.போட்டிகளை சமாளிப்பீர்கள். நன்மை உண்டாகும்.

**மிதுனம்**

நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி நன்மையாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் எண்ணம் எளிதில் நிறைவேறும்.தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். பழைய கடன்களை அடைப்பீர்கள்.

**கடகம்**

கவனமுடன் செயல்படுங்கள். தடை ஏற்படும். செய்யும் செயல்களில் முன்னேற்றம் குறையும். குழப்பம் அதிகரிக்கும். மற்றவர்களிடம் வீண் விவாதம் வேண்டாம். மனவுளைச்சலால் சிரமத்தை சந்திப்பீர்.

**சிம்மம்**

உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.வரவேண்டிய பணம் வந்து சேரும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கன்னி**

எதிர்ப்புகளை இல்லாமல் செய்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.வியாபார வளர்ச்சியில் அக்கறை செலுத்துவீர்கள். மறைமுகத் தொல்லை விலகும்.

**துலாம்**

எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.பயணத்தை ஒத்திப் போடுவீர்கள். வழக்கமான செயல்களில் நன்மைகள் உண்டு.பணிபுரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**

உறவினர் ஒருவரால் நன்மையுண்டு. தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.தொழிலில் இருந்து வந்த தடை விலகும். வருமானம் அதிகரிக்கும்.பழைய கடனை சிறிது அடைப்பீர்கள்.

**தனுசு**

குடும்பத்தில் செல்வாக்கு உயரும் நாள்.வருவாய் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.வியாபாரத்தில் புதிய அணுகு முறையைக் கையாளுவீர்கள். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள்.

**மகரம்**

குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும். வருமானம் அதிகரிக்கும்.உங்கள் செல்வாக்கு வெளிவட்டாரத்தில் உயரும். ஆரோக்கியம் சீராகும் நாள். வேலைக்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும்நாள்.

**கும்பம்**

திட்டமிட்டு செயல்படுவீர்கள். குடும்பத்தில் வாக்குவாதம் உண்டாகும். உங்கள் முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். பணியிடத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பணவரவு திருப்தி அளிக்கும்.

**மீனம்**

திடீர் செலவால் சங்கடம் அடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் குடும்பத்தின் தேவை ஒன்றை நிறைவேற்றுவீர்கள். இன்று முடிவிற்கு வர வேண்டிய வேலை நாளைக்கு தள்ளிப்போகும் நாள்.

# நளினி 6 பேர் விடுதலை வழக்கு; 11ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

*சென்னை, நவ. 04*

நளினி உட்பட 6 பேரை விடுதலை செய்யக் கோரிய வழக்கை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நளினி உள்ளிட்ட 6 பேர் சிறையில் உள்ளனர். உச்ச நீதிமன்றம் கடந்த மே 18ஆம் திகதி சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்தது.

பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து மற்ற 6 பேரும் விடுதலை செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.ஆர்.கவாய் அமர்வு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தமிழக அமைச்சரவை தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுப்பதில் தாமதம் செய்ததாகக் கூறி அரசமைப்பு சட்டத்தின் 142ஆவது பிரிவின் கீழ் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்ய உச்சநீதிமன்றம் கடந்த மே மாதம் உத்தரவிட்டது.

இதனிடையே, சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மற்ற ஆறு பேரில் ரவிச்சந்திரன், நளினி ஆகிய இருவரும் தங்களையும் இதே காரணத்துக்காக சிறையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கூறி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த விவகாரத்தை விசாரித்த உயர்நீதிமன்றம், இது போன்று ஏற்கெனவே ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருப்பதாலும், பேரறிவாளனை உச்சநீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவித்தது போன்ற அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு இல்லை என்றும் கூறி அந்த மனுக்களை தள்ளுபடி செய்து கடந்த ஜூன் 17-ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து, ரவிச்சந்திரன், எஸ்.நளினி ஆகியோர் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்கில் தமிழக அரசு பதிலளித்துள்ள நிலையில், மத்திய அரசுக்கும் பதிலளிக்க அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தது.

இந்நிலையில், நளினி உள்பட 6 பேரை விடுதலை செய்யக் கோரிய வழக்கை நவ.11 ஆம் திகதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

# கோவை குண்டுவெடிப்பு; 900 பேர் கண்காணிப்புக்குள்!

*கோயம்புத்தூர், நவ. 04*

கார் வெடிப்பு சம்பவம் தொடர்பாக கோயம்புத்தூரில் சந்தேகத்துக்கு உரியவர்கள் என 900 பேரை பொலிஸார் கண்டறிந்தனர். இவர்கள் அனைவரும் பொலிஸாரின் கண் காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கோயம்புத்தூர் கோட்டை ஈஸ்வரன் கோவில் முன்பு கடந்த மாதம் 23ஆம் திகதி நடந்த கார் வெடிப்பில் ஜமேஷா முபீன் என்பவர் உயிரிழந்தார். விசாரணையில், முபீன் தனது கூட்டாளிகளுடன் கோயம்புத்தூரில் நாச வேலைக்கு திட்டமிட்டது தெரியவந்தது. இதையடுத்து முபீனுடன் தொடர்பில் இருந்த அவரின் நண்பர்கள் 6 பேர் கைது செய்யப்பட் டனர். இந்த வழக்கு தொடர்பாக என்.ஐ.ஏ. (தேசிய புலனாய்வு முகமை) அதிகாரிகள் விசா ரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே என்.ஐ.ஏ. அதிகாரிகள் இறந்த முபீன் வசித்த கோட்டைமேடு, கோட்டை ஈஸ்வரன் கோவில் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

இறந்த முபீன் கோட்டைமேடு பகுதியில் உள்ள வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தார். அவர் வசித்த வீடு, கோட்டை ஈஸ்வரன் கோவிலில் இருந்து 350 மீற்றர் தொலைவில் உள்ளது. கார் வெடிப்பு சம்பவம் நடப்பதற்கு முன்பு முபீன் பல முறை அந்த பகுதியில் சுற்றி திரிந்துள்ளார். இதனால் என். ஐ. ஏ. அதிகாரிகள் முபீனின் வீட்டில் இருந்து கோட்டை ஈஸ் வரன் கோவில் பகுதி வரை உள்ள கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமெராக்களை ஆய்வு செய்தனர்.

பணப்பரிமாற்றம் தொடர்பாக இந்த விவகாரத்தில் கைதான 6 பேரின் வங்கி கணக்கு களை ஆய்வு செய்யும் பணியும் நடக்கிறது. கார் வெடிப்பு சம்பவம் நடை பெற்றதில் இருந்து தற்போது வரை தமிழகம் முழுவதும் 137 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இந்நிலை யில் கோயம்புத்தூர் மாவட் டத்தில் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் அனுதாபி கள், ஆதரவாளர்கள், சந்தேகத்துக்கு உரியவர் கள் என 900 பேரை பொலிஸார் கண்டறிந்த னர். அது தொடர்பான பட்டியல் தயாரிக்கப் பட்டு உள்ளது. இவர்கள் அனைவரும் பொலிஸாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

(ஐ)

# விரும்பினால் மட்டும் ஹிந்தியை படியுங்கள்!

## பா. ஜ. கட்சி சொல்கிறது

*சென்னை, நவ. 04*

விருப்பம் இருந்தால் ஹிந்தி படிக்கலாம். ஹிந்தியை யாரிடமும் திணிக்கவில்லை என்று பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பேசிய அவர்,

உளவியல், வரலாறு, புவியியல்உள்ளிட்ட பல்வேறு படிப்புகள் படித்திருந்தாலும் கூட, அரசியல் அறிவியல் படிப்பு என்பது அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஓர் அரசியல்வாதி தனது பணியில் வெற்றி பெறுவதற்கு ஒரு கருவி தேவைப்படுகிறது.

ஆனால், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா ஆகிய இரு அரசியல் தலைவர்களும் அசாதாரணமான சூழ்நிலையில், அரசியலுக்குள் நுழைந்து தங்களை, உருவாக்கி, செதுக்கி, 10 ஆண்டு காலத்தில் உச்சகட்ட நிலையை அடைந்தவர்கள். ஒரு தலைமையின் மிகப் பெரிய வேலை, மற்றொரு தலைமையை உருவாக்குவது தான்.

அரசியலுக்கு ஒருவர் வரும்போது, அது நமக்கு தேவையா என யோசித்து முடிவெடுக்க வேண்டும். சரியாக முடிவெடுக்காத பல அரசியல்வாதிகள் அரசியலில் தோல்வியைசந்திக்கின்றனர். பல அரசியல்வாதிகள் தங்கள் முகத்தை திரை கொண்டு மறைத்து விடுகின்றனர். வெளிப்படை தன்மையுடன் இருந்தால்தான் அரசியலில் வெற்றி பெறமுடியும் - என்றார்.

(ஐ)

# இலங்கைக்கு மீண்டும் உதவ ஐரோப்பிய ஒன்றியம் தயார்!

## இரு தரப்பும் பங்கேற்ற கூட்டத்தில் தகவல்

கொழும்பு, நவ. 04

**தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிப்பதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.**

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான செயற்குழுவின் 06ஆவது கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியம் இதனைத் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கையின் அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை மீள ஸ்தாபிப்பதுடன் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதையும் இலக்காகக் கொண்ட அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் குறித்தும் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெரியப்படுத்தியுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளதுடன், அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே அது நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை தெரிவித்துள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை குறித்தும் இங்கு விரிவாக விவாதிக்கப்பட்டது. (அ)

# பெரிய வெங்காயம் விலை அதிகரிப்பு!



கொழும்பு, நவ. 04

பெரிய வெங்காயத்தின் விலை வழக்கத்தை விட அதிகமாக இருப்பதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

பொதுச் சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 280 ரூபா முதல் 300 ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் நிலையில், பேலியகொடை மெனிங் சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை, பேலியகொடை மானிங் சந்தையில் ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 330 ரூபாவாகவும், நாரஹேன்பிட்டி பொருளாதார நிலையத்தில் 480 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை, மரக்கறிகளின் விலையும் வழமையை விட அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர, நாரஹேன்பிட்டி பொருளாதார நிலையத்தில் கரட் கிலோ ரூ.420, பீன்ஸ் கிலோ ரூ.520, முட்டைகோஸ் ரூ.360, கத்தரிக்காய் கிலோ ரூ.400, பூசணி கிலோ ரூ.280, பச்சை மிளகாய் கிலோ ரூ.400, எலுமிச்சம் பழம் கிலோ ரூ.800, தக்காளி கிலோ ரூ.440 ஆக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெண்ணிடம் சேஷ்டை; நாமல்குமார கைதானார்

கொழும்பு, நவ. 04

பெண் ஒருவரிடம் பாலியல் சேஷ்டை செய்த குற்றச்சாட்டில் ஊழல் எதிர்ப்பு முன்னணியின் செயற்பாட்டுப் பணிப்பாளர் நாமல் குமார வரக்காபொல பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

தனது வீட்டுக்குள் வைத்து தன்னை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக குறித்த பெண் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

பின்னர், குறித்த பெண் அவரை வீட்டில் இருந்து வெளியே இழுத்து வந்து மரத்தில் கட்டி வைத்துத் தாக்கியதாகவும், மேலும் நான்கு பேரும் நாமலைத் தாக்கியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாமல் குமாரவினால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளானதாக கூறப்படும் குறித்த பெண் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இதேவேளை, வாரியகொட பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யும் வீடொன்று தொடர்பில் தகவல் சேகரிப்பதற்காக தனது மனைவியுடன் சென்றபோது குறித்த பெண் உள்ளிட்ட குழுவினரால் தான் தாக்கப்பட்டதாக நாமல்குமார வரக்காபொல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, நாமல் குமார தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான பெண் உட்பட ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் வரக்காபொல நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (அ)

# பரசிற்றமோல் தட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 04

நாட்டிலுள்ள சில மருத்துவமனைகளில் பரசிற்றமோல் மருந்துக்கும் கூட கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அதன் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இதனை தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டில் தொழில் தேடும் இளைஞர்களே மிக அவதானம்

கொழும்பு, நவ. 04

வெளிநாட்டில் வேலைவாய்ப்பை பெற்று தருவதாக கூறி சுமார் 300 இளைஞர் யுவதிகளிடம் பண மோசடி செய்த நபர் ஒருவர், தலங்கம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மோசடியில் சிக்கிய சிலர் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த போலி வெளிநாட்டு முகவர் நிலையம் பத்தரமுல்லை-ரஜமல்வத்த என்ற இடத்தில் உள்ளது.

மலேசியாவில் தொழில் வாய்ப்பைப் பெற்று தருவதாக தெரிவித்து அஜித்குமார விக்ரமசிங்க என்ற நபர், நாடு முழுவதிலும் சுமார் 180 இளைஞர் யுவதிகளிடம் தலா 1 இலட்சத்து 51,000 ரூபா வீதமும், ஏனையவர்களிடம் 6,000 ரூபா வீதமும் பணம் பெற்றுக் கொண்டுள்ளார்.

பணம் செலுத்தப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் வேலைவாய்ப்பு கிட்டவில்லை. இதனால் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்திற்குச் சென்று இவர்கள் கேட்டுள்ளனர். இதன் உரிமையாளர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து தம்மை ஏமாற்ற முயற்சித்ததாக அந்த இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தலங்கம பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தலங்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இழப்பீடு வழக்கு டிசெம்பரில்!



கொழும்பு, நவ. 04

உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவஸ்தானத்தின் மீதான தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 128 வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி மஹேஷ டி சில்வா தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதி குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவதாக அவர் அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளையில், அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததன் காரணமாக சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் இவ்வாறு நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, சுமார் 200 கோடி ரூபா நட்டஈடுத் தொகையை வழங்கவேண்டுமென மனுதாரர்கள் ஊடாக கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்டாக்காலி கால்நடைகளால் அவதியுறுகின்றனர் பயணிகள்

வவுனியா, நவ. 04

வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி மாடுகளால் மக்கள் போக்குவரத்து மேற்கொள்வதில் பெரும் சிரமத்தினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மழை ஆரம்பித்துள்ள நிலையில் நெளுக்குளம், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், குளுமாட்டுச்சந்தி, பூந்தோட்டம் மற்றும் வவுனியா நகர் போன்ற பல்வேறு பகுதிகளில் இரவு மற்றும் காலை வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் நடு வீதிகளில் படுத்துறங்குவதனால் போக்குவரத்து செய்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக விபத்துக்கள் ஏற்பட்டு கடந்த காலங்களில் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். எனவே கட்டாக்காலி மாடுகளை பிடித்து போக் குவரத்துக்களை இடையூறுகள் இன்றி மேற்கொள்வ தற்கு உதவி செய்யுமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர். (அ)



# உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்குத் தயார்!

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 04

**நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட கட்டமைப்புக்குள் உள்ளூராட்சிச் சபை தேர்தலை நடத்தத் தயாரெனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில், தேர்தல் நடத்துவதும் அபிவிருத்தியே என்றும் அவர் கூறினார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, கட்சிகளின் உள்ளக ஜனநாயகம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சிக்கல்கள் உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைமுறை தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

உள்ளூராட்சிச் சபை தேர்தல் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் ஆகியோர் இவ்வாறு கருத்துக்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜேர்மனியிலிருந்து அனுப்பப்பட்ட பொதிக்குள் போதை மாத்திரைகள்

பேர்லின், நவ. 04

ஜேர்மனியில் இருந்து அங்கொட பகுதியில் உள்ள முகவரிக்கு அனுப்பப்பட்ட பொதி ஒன்றில் போதை மாத்திரைகள் சுங்கத் திணைக்களத்தினால் பரிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தபால் மதிப்பீட்டுப் பிரிவில் ஜேர்மனியில் இருந்து அனுப்பப்பட்ட தபால் பொதி ஒன்று விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே குறித்த மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.



இதன்போது 2387 கிராம் எடையுடைய 4956 போதை மாத்திரைகள் இருந்ததாகவும், அவற்றை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் பரிசோதித்த பின்னர் அவற்றின் சந்தைப் பெறுமதி 49.56 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக குறித்த பொருட்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

# மலையக அபிவிருத்திக்கு ஜப்பான் தோள் கொடுக்கும்

## ராதாவிடம் தூதுவர் உறுதி

கொழும்பு, நவ. 04

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.ராதாகிருஷ்ணன் எம்.பிக்கும், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று, நுவரெலியாவில் இடம்பெற்றது.



இக்கலந்துரையாடலில் ஜப்பான் தூதரகத்தின் இரண்டாம் நிலை செயலாளர் கவோரி இமாய் மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளரும் கொட்டகலை வர்த்தக சங்க தலைவருமான புஸ்பா விஸ்வநாதனும் பங்கேற்றனர்.

மலையக மக்கள் தொடர்பில் பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டதோடு, மலையக பகுதிகளினதும் மலையக மக்களின் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கான பல கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டது.

மேலும் நல்லாட்சி அரசாங்கத்தின்போது ஹொலிரூட் ரத் டிவிசனில் - 2018ஆம் ஆண்டு பத்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் தாதியர் பயிற்சி நிலையம், தொழிற்பயிற்சி நிலையம், ஆசிரியர் பயிற்சி நிலையம், முன்பள்ளி பாடசாலை போன்றவற்றை அமைப்பதற்கான நிதி உதவிகளை தருவதாக ஜப்பானிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாகவும் ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின் அந்த கோரிக்கைகள் அப்படியே நிறுத்தப்பட்டு இருப்பதாகவும் ராதாகிருஸ்ணன் தெரிவித்ததோடு அதை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவியையும் கேட்டுக்கொண்டார்.

ஜப்பானில் மலையக இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள்,ஜப்பானிய மொழியை இலங்கையில் பயில்வதற்கான ஆசிரியர்கள் உட்பட சிறுகைத்தொழில் செய்வோர்களுக்கான உதவிகள் போன்றனவும் இலங்கைக்கான ஜப்பானிய தூவரிடம் கலந்துரையாடப்பட்டது. அவ் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்று அதனை உடனடியாக நிறைவேற்ற ஜப்பானிய அரசாங்கத்திடம் கலந்துரையாடப்பட்டு விரைவில் அதற்கான தீர்வினை வழங்குவதாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் கலந்துரையாடலை மேற்கொண்ட ராதாகிருஷ்ணனிடம் ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்தார். (அ)

# புகைப்பிடிப்பவர்கள் எண்ணிக்கை வீழ்ச்சி!

கொழும்பு, நவ. 04

நாட்டில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை 9.1 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், புகைப்பிடிப்பவர்களில் 51 சதவீதமானவர்களில் அதிலிருந்து விலகுவார்கள் என தாம் நம்புவதாகவும் வர்த்தக நிலையங்களில் சிகரெட் சில்லறை விலைக்கு உள்ளதே அவர்களுக்கு அதிலிருந்து விடுபடத் தடையாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அதற்கு தடைவிதிப்பதுடன், சிகரெட்டுக்கான விலை மேலும் அதிகரிக்கப்பட்டு, அதற்காக விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும், புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

# வெடிபொருட்களை வைத்திருந்தவர் கைது

கொழும்பு, நவ. 04

சட்டவிரோதமான முறையில் வெடிபொருட்களை தன்வசம் வைத்திருந்த 34 வயதான நபர் ஒருவரை கஹவத்தை விசேட அதிரடி படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து பலாங்கொடை தாமஹன பிரதேசத்தைச் சேர்ந்த அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் கட்டட நிர்மாண நிறுவனமொன்றின் உரிமையாளரான இவர் தனது பண்டகசாலையில் பாதுகாப்பற்ற முறையில் வெடிபொருட்களை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. (அ)

# 10 ஆயிரம் கனேடிய டொலருக்கு ஆசை காட்டி வங்கி ஊழியரிடம் ரூ.2.7 மில்லியன் பறிப்பு!

கொழும்பு, நவ. 04

பேஸ்புக் மூலம் அறியப்பட்ட ஒருவரிடமிருந்து 10,000 கனேடிய டொலர்களை கொள்வனவு செய்யச் சென்ற தனியார் வங்கி ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு அவரிடமிருந்து 2.7 மில்லியன் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் பேலியகொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

களனி, வனவாசல, பொசோன் வத்த பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

10,000 கனேடிய டொலர்களை மாற்றுவது தொடர்பாக ஒருவர் பேஸ்புக்கில் வெளியிட்ட விளம்பரத்தை பார்த்த வங்கி ஊழியர், அவரைத் தொடர்பு கொண்டுள்ளார். ஒரு கனேடிய டொலரை ரூ.275 வீதம் மாற றத்' தயாராக இருப்பதாக அந்த நபர் கூறியுள்ளார். நாட்டில் கனேடிய டொலர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால், குறைந்த விலையில் கிடைக்கும் கனேடிய டொலரை மாற்ற விரும்பியதாக வங்கி ஊழியர் பேலியகொடை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த நபர் வசிக்கும் களனி, வனவாசல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு வங்கி ஊழியரும் அவரது தந்தையும் சென்றுள்ளனர்.

எனினும், அவ்விடத்துக்கு வந்த இருவர், வங்கி ஊழியரின் முகத்தில் விஷப் பொருளை வீசிவிட்டு, பணப் பையை பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.எனினும், கொள்ளையர்கள் பணத்துடன் தப்பிச் சென்றபோது, 30,000 ரூபா பணம் கீழே விழுந்துள்ளது. 2.7 மில்லியன் ரூபா பணத்துடன் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

விசாரணையில், போதைப் பழக்கத்துக்கு அடிமையான ஒருவரே இந்தத் திருட்டைத் திட்டமிட்டுச் செய்திருப்பது தெரியவந்துள்ளது.

வங்கி ஊழியரை தான் முன்னர் தங்கியிருந்த வாடகை வீட்டுக்கு வலைவீசி அழைத்துள்ளார். ஆனால் அவர் தற்போது அந்த வீட்டில் வசிக்கவில்லை என்றும், வேறு தரப்பினர் வாடகைக்கு குடியிருப்பதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வங்கி ஊழியரை ஏமாற்றி பணத்தை கொள்ளையிட்ட பிரதான சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பேலியகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

இடர்களை எதிர்கொள்ள

## முல்லை. மாவட்டத்தில் 154 முகாம்கள் தயார்!

முல்லைத்தீவு, நவ. 04

பருவப் பெயர்ச்சி மழையால் ஏற்படும் இடர்களை எதிர்கொள்ளும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்து உதவிப் பணிப்பாளர் சி.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"முல்லைத்தீவு மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 35 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இயற்கை இடர் ஏற்படுடம் பட்சத்தில் மக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன" - என்றார். (அ)

## பக்க விளைவுகள் ஏற்படுத்தும் முகத்தை வெள்ளையாக்கும் கிரீம்!

தோல் நோய் மருத்துவர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 04

சருமத்தை வெண்மையாக்கும் பல்வேறு முகப்பூச்சு க்ரீம்கள் சரும சிக்கல்களை ஏற்படுத்துவதாக தோல் நோய் நிபுணர் வைத்தியர் சஞ்சீவ ஹூலங்கமுவ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே வைத்தியர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமூகத்தில் பலர் சருமத்தை வெண்மையாக்கும் முகப்பூச்சுக்களை பயன்படுத்துவதில் முனைப்புடன் உள்ளனர்.

இதுபோன்ற அழகுசாதனப் பொருட்களை முகத்தில் பயன்படுத்துவதால் பருக்கள் மற்றும் தேவையற்ற முடிகள் ஏற்படும். இதுபோன்ற அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதால் கண் அழுத்தத்தை அதிகரித்து கண்புரை கூட ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு.

முறையான வைத்திய தரத்தில் இல்லாத இவ்வாறான முகப்பூச்சுக்களை பயன்படுத்துவதன் மூலம் சருமத்தில் விஷத்தன்மை ஏற்பட வாய்ப்பு உள்ளது-என்றார். (அ)

# பதவியை துறக்கிறார் ஹரின் பெர்னாண்டோ!

சமூக நீதிக்கான இயக்கத்தில் இணைகிறார்

கொழும்பு, நவ.04

**சுற்றுலாத்துறை அமைச்சுப் பதவியிலிருந்து விலகவுள்ளதாக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**



இந்நிலையில், கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தில் சேர எதிர்ப்பார்த்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இது குறித்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் சிரேஷ்ட ஊடகர் விக்டர் ஐவன் ஆகியோரால் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் கோட்பாடு குறித்து தமக்கு விளக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையில் நாட்டுக்கு இதுவே தேவையாக இருக்கும் திட்டமாகும். இன, மத, பேதங்களால் பிரிந்து போயுள்ள நாட்டின் அரசியல் கலாசாரம் மொத்தமாக பிழையானது.

ஒக்ஸ்ட் மாதமளவில் நாட்டின் நிலைமை சீரடைந்தால் அமைச்சுப் பதவியில் இருந்தும் அரசியல் வலயத்தில் இருந்தும் விலகி, அந்த அமைப்புடன் சேர எதிர்ப்பார்த்துள்ளேன்-என்றார். (அ)

## இலங்கை யுவதிகளை பணிப்பெண்களாக ஓமானுக்கு அழைத்துச் சென்று விபசாரம்!

கொழும்பு, நவ. 04

இலங்கை யுவதிகளை வீட்டுப் பணியாளர்களாக வேலைக்கு அமர்த்துவதாகக் கூறி ஓமானுக்கு அழைத்துச் சென்று விபசாரத்தில் ஈடுபடுத்தும் மோசடியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் துறை, ஆட்கடத்தல் மற்றும் கடத்தல் விசாரணை மற்றும் கடல் குற்றப் பிரிவு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த குழு ஓமன் சென்று விசாரணை நடத்தி, மோசடியில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டுள்ளது.

இந்த மோசடியில் ஈடுபட்ட இலங்கையை சேர்ந்தவர்களை கைது செய்வதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களம், ஆட்கடத்தல் மற்றும் கடத்தல் விசாரணை மற்றும் கடல் குற்றப் பிரிவினருடன் ஏற்கனவே விரிவான விசாரணையை ஆரம்பித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து தற்போது அந்த வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (அ)

## கேப்பாப்பிலவு விமானப்படை சிப்பாய் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, நவ. 04

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு பகுதியில் அமைந்துள்ள விமானப்படைத் தளத்தில் கடமையாற்றும் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன் தினம் இரவு தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சிப்பாயே இவ்வாறு தவறான முடிவெடுத்துள்ளார் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு மரண விசாரணை அறிக்கை பெறப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சிகரெட்டை விடவும் கொடிய நுளம்புசுருள்

வருடாந்தம் 40 இலட்சம் பேர் மரணம்

உள்ளக வளி மாசடைவினால் உலகம் முழுவதும் வருடாந்தம் 40 இலட்சத்துக்கு அதிகமானோர் உயிரிழக்கின்றனர் என மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் துசித சுகதபால தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன் தினம் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தினால் நடத்தப்பட்ட செயலமர்வொன்றில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலித்தீன் எரித்தல், வீட்டுக்குள் ஊதுபத்திகளை ஏற்றுதல், நுளம்பு சுருள்களை பற்ற வைத்தல் போன்ற செயற்பாடுகள் வீட்டின் உட்புறத்திலும் வெளியிலும் வளி மாசை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக 100 சிகரெட்டைப் பற்ற வைப்பதன் மூலம் வெளிவரும் புகையில் உள்ள நச்சுத் தன்மையை விட ஒரு நுளம்பு சுருளில் இருந்து வெளிவரும் புகையிலும் நச்சுப் பொருளின் அளவு அதிகம் என சிரேஷ்ட விரிவுரையாளர் மேலும் கூறினார். (அ)

## வடக்கு மாகாணத்தில் இவ்வருடம் 16 படையினரின் சடலங்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 04

வடக்கு மாகாணத்தில் படையினரின் மர்ம மரணங்கள் தொடர்கின்றன.

வடக்கில் இவ்வருடம் இதுவரை 16 படையினரின் (இராணுவம், கடற்படை, விமானப்படை) சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 13 சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளன,

16 சடலங்களில் 11 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்றும், 2 பேர் சக சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 3 பேர் திடீர் சுகயீனம் காரணமாக இறந்துள்ளனர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொருளாதார நெருக்கடியினால் பெண்கள், குழந்தைகள் பாதிப்பு

கொழும்பு, நவ. 04

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெண்களும் குழந்தைகளும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய அலுவலகத்தின் தலைவர் மிக்கிகோ தனகா, கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவுடன் கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் சிறிய அளவிலான பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் குடும்ப சூழலில் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களை வலுப்படுத்த நல்ல சந்தர்ப்பம் காணப்படுவதாக தெரிவித்தார்.

இதன்போது ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய நுண் மற்றும் சிறிய அளவிலான பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக கைத்தொழில் அமைச்சு பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக ரமேஷ் பத்திரன சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பிரேசிலில் லூலாவின் வெற்றிப் பின்னணி! இடது அலையும் தப்பிய அமேசானும்!

**- எம். பாண்டியராஜன்**

**மி**கக் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றிருந்தபோதிலும் பட்டினியால் அவதியுறும் பிரேசில் மக்களுக்கும் உலக அளவில் இடதுசாரிகள் மற்றும் பசுமைக் காப்பாளர்களுக்குப் பெரும் நம்பிக்கையளித்திருக்கிறார் பிரேசில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா.

நாடு தழுவிய அதிபர் தேர்தலில் முன்னாள் தொழிற்சங்கத் தலைவரும் ஏற்கெனவே இரு முறை பிரேசிலின் அதிபராக இருந்த இடதுசாரியுமான லூலா, 50.9 சதவிகித வாக்குகளையும் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தற்போதைய அதிபரும் வலதுசாரியுமான ஜெயிர் பொல்சொனாரோ 49.1 சதவிகித வாக்குகளையும் பெற்றனர். 2023 ஜனவரி 1 ஆம் திகதி, நாட்டின் 39-வது அதிபராக லூலா பொறுப்பேற்கவுள்ளார்.

தேர்தலுக்கு முன்பிருந்தே லூலாவுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அதிபர் பொல்சொனாரோ கூறிவந்த நிலையில் இன்னமும் தோல்வியை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், அவரோ அவருடைய ஆதரவாளர்களோ கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால், வெற்றி அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே அமெரிக்க அதிபர் ஜோ பைடனிலிருந்து உலகத் தலைவர்கள் அனைவரும் லூலாவை வாழ்த்தத் தொடங்கிவிட்ட நிலையில், பொல்சொனாரோவுக்கு தோல்வியை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தலில் நாடே இரண்டுபட்டுக் கிடந்தபோதிலும், வெற்றி பெற்றவுடன் ஆற்றிய உரையில், “2023 ஜனவரி முதல் நாளில் பிரேசிலின் 21.5 கோடி மக்களுக்குமான அதிபர்தான் நான். எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டும் அல்ல. இரண்டு பிரேசில்களும் இல்லை, நாம் ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரு மாபெரும் தேசம்” என்று குறிப்பிட்டுள்ளார் லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா.




### யார் இந்த லூலா?

பிரேசிலில் கடந்த 30 ஆண்டுகளாக அனைவரும் அறிந்த பெயர் லூலா. மூன்றாவது முறையாக பிரேசிலின் அதிபர் பொறுப்பேற்கும் லூலா, தொழிலாளர் குடும்பத்திலிருந்து வருபவர். சிறு வயதிலேயே தாய், தந்தையுடன் பெர்னாம்புகோ என்ற நாட்டுப்புறப் பகுதியிலிருந்து சா பாவ்லோ நகருக்குக் குடியேறிய அவர், பின்னர் உருக்காலைத் தொழிலாளியாக, 1970-களில் தொழிற்சங்கத் தலைவராக வாழ்க் கையைத் தொடர்ந்தவர். பிரேசிலில் ராணுவ சர்வாதிகாரம் ஆட்சியிலிருந்த காலத்தில் 1978 - 1980 காலகட்டத்தில் பெரிய அளவிலான தொழிலாளர் வேலைநிறுத்தங்களை முன்னெடுத்தவரான லூலாவுக்கு 1980-ல் இடதுசாரி தொழிலாளர் கட்சியைத் தொடங்குவதிலும் பெரும் பங்கிருந்தது.

1989-ல் அதிபர் தேர்தலில் போட்டியிட்டு முதல் சுற்றிலேயே தோற்ற இவர், 1994, 1998 தேர்தல்களில் இறுதிச் சுற்றுக்கு வந்தும் தோற்றுவிட்டார். 2002 அதிபர் தேர்தலில் ஜோ ஸேராவை வென்று முதன்முதலில் அதிபரானார். 2003 ஜன. 1-ல் பதவியேற்று 2010 டிச. 31 வரை பதவி வகித்தார். தொடர்ந்து இரு முறை அதிபராக இருந்த இவருடைய ஆட்சிக்காலம், பிரேசிலின் சிறந்த காலம் எனலாம். பிரேசிலியப் பொருள்களின் மதிப்புகள் மிகுந்தன, சீனாவுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்தன, பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்றது.

இவருடைய ஆட்சிக் காலத்தில் ஏராளமான மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. குழந்தைத் தொழிலாளர்களை ஒழித்து, அவர்களின் கல்வியை உறுதி செய்யும் வகையில், பள்ளிகளுக்குக் குழந்தை கள் வருவதைப் பொருத்து அவர்கள் குடும் பத்தினருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தால் ஏழை எளிய பிரேசிலியர்களிடையே இவர் பெரும் செல்வாக்குப் பெற்றார்.இவருடைய ஆட்சிக்காலத்தில்தான் ஐ.நா. அவையின் பட்டினிப் படத்திலிருந்து வெளியே வந்தது பிரேசில். கடன்கள், பண வீக்கம் குறைந்தன. கோடிக்கணக்கானோர் வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.



2017-ல் லூலா மீது லஞ்ச - ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விசாரணை நடைபெற்றது. லஞ்சமாக சொகுசு அபார்ட்மென்ட் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட அவருக்கு 9 ஆண் டுகளுக்கும் கூடுதலான சிறைத் தண்டனை விதிக் கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு அரசியல் உள் நோக்கம் கொண்டதெனத் தொடர்ந்து லூலா மறுத்துவந்தார் (இவருக்கு சிறைத் தண்டனை விதித்த நீதிபதியோ பின்னர் அதிபர் பொல் சொனாரோவிடம் நீதித் துறை அமைச்சராகச் செயல்பட்டார்!).

மேல் முறையீட்டில் 2021-ல் பிரேசில் உச்ச நீதிமன்றம், நியாயமான விசாரணை நடத்தப்படவில்லை எனத் தெரிவித்து, லூலாவுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை ரத்து செய்தது. 2022 அதிபர் தேர்தலில் பொல்சொனாரோவுக்கு எதிராகப் போட்டியிடவும் அனுமதித்தது.

### எவ்வாறு வெற்றி பெற்றார்?

கெரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் அதிபர் பொல்சொனாரோவின் அணுகுமுறையும் பிரேசிலின் ஜனநாயகத்துக்கு எதிரான தாக்குதல்களும் பெரிய அளவில் அவருக்கு எதிரான சக்திகளை ஒன்றுதிரட்டுவதில் லூலாவுக்கு உதவியாக இருந்தன. 2006-ல் லூலாவை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்ற, மிதமான வலதுசாரியான முன்னாள் சா பாவ்லோ ஆளுநர் ஜெரால்டோ அக்மின், இப்போது இவருடைய அணியில் இருப்பதுடன் துணை அதிபராகவும் பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

பிரேசிலை மீண்டும் கட்டியெழுப்புவதாக உறுதியளித்து வெற்றி பெற்றுள்ள லூலாவின் முன் நிறைய சவால்கள் இருக்கின்றன - ஆண்டுக்கணக்கில் அரசு ஆதரவின்றி நசித்துப்போன பொதுத்துறை சேவைகளை மீட்டெடுக்க வேண்டும், உள்ளூர் எரிபொருள் விலை அதி கரிப்பைக் கட்டுப்படுத்த படிவு ஆற்றல் வளங்களைப் பயன்படுத்த வேண்டும், எல்லாவற்றுக்கும் மேலாக உணவுப் பற்றாக்குறையால் தவித்துக் கொண்டிருக்கும் பல லட்சக்கணக்கான பிரேசிலியர்களைக் காப்பாற்ற வேண்டும்.

### அமேசான் காடுகள் தப்பின!

மிக வெளிப்படையாகக் கடந்த நாலாண்டுகளில் சுற்றுச்சூழல் குற்றங்களை ஆதரித்தும் ஊக்குவித்தும் வந்தது அதிபர் பொல்சொனாரோவின் அரசு. லூலா வின் வெற்றியானது, இந்தப் பிராந்தியத்துக்கு மட்டு மல்ல, மனித நேயத்துக்கும் வாழ்வுக்குமான வெற்றி என்று கொண்டாடுகிறார்கள் சூழலியலாளர்கள். கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமேசான் மழைக் காடுகளை அழிப்பதில் முன்னிலையிலிருந்த பொல்சொனாரோ, சூழல் ஒழுங்கு முறை அமைப்புகளை யெல்லாம் உருக்குலையச் செய்தார். பொல்சொனாரோ ஆட்சிப் பொறுப்பேற்ற 2019-ல் இருந்த நிலைமையைவிட தற்போது 75 சதவிகிதம் மோசமாக அமேசான் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. 2021-ல் 13 ஆயிரம் ஹெக்டேர் வனப்பரப்பு இழக்கப்பட்டிருக்கிறது. 2008- லிருந்து இது வரையிலான காலகட்டத்தில் இதுவே மிக அதிகம். மாறாக, லூலா வின் ஆட்சிக்காலத்தில் காடழிப்பு 72 சதவிகிதம் குறைந்திருந்தது. அமேசான் காடுகளைப் பாதுகாப்போம் என்பதும் லூலாவின் தேர்தல் பிரசாரங்களில் ஒன்று. அமேசானிலிருந்து சட்ட விரோத கனிம சுரங்கநிறு வனங்களையும் பண்ணைகளையும் வெளியேற்றுவோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

### இடதுசாரிகளின் வெற்றி

லத்தீன் அமெரிக்க நாடுகளில் தற்போது தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்தப் பகுதியில் கடந்த இருபதாண்டுகளாக இருந்து வந்த வலதுசாரி, அடிப்படைவாத அரசுகள், ஒவ்வொன்றாகக் கடந்த 4 ஆண்டுகளாக, மக்களால் அகற்றப்பட்டு சோசலிச அல்லது சமூக ஜனநாயக சக்திகள் ஆட்சிக்கு வரத் தொடங்கியுள்ளன.

கொலம்பியாவில் கடந்த ஜூன் மாதத்தில் ஏப்ரல் இயக்க ஆயுதக் குழுத் தலைவரான கஸ்தோவா பெட்ரோ அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிலியில் 2021 டிசம்பரில் இடதுசாரித் தலைவரான கேப்ரியல் போரிக் அதிபராக வெற்றி பெற்றார். அதற்கு ஒரு மாதத்துக்கு முன், ஹோண்டுராஸில் இடதுசாரி தலைவரான ஸியாமாரோ கேஸ்ரோ ஆட்சியைக் கைப்பற்றினார்.

2021 ஜூனில் பெருவில் ஆசிரியரும் தொழிற்சங்கத் தலைவருமான பெட்ரோ காஸ்டில்லா அதிபர் தேர்தலில் வென்றார். 2020-ல் பொலிவியாவில் சோசலிச இயக்கத் தலைவரான லூயிஸ் ஆர்ஸ் வெற்றி பெற்று அதிபர் பொறுப்பேற்றார்.

2019-ல் ஆர்ஜென்டினாவில் இடதுசாரி ஆதரவு கூட்டணியின் ஆதரவு பெற்ற அல்பெர்தோ பெர்னாண்டஸ் ஆட்சிப் பொறுப்பேற்றார். 2018-ல் மெக்சிகோ பொதுத் தேர்தலில் இடதுசாரியான ஆண்ட்ரூஸ் மானுவல் லோபஸ் ஆப்ரடார் பெரும் வெற்றி பெற்றார். தற்போது பிரேசிலில் இடதுசாரியும் தொழிற்சங்கவாதியுமான லூலா வெற்றி பெற்றிருக்கிறார்.

இதற்கு முன்னர் இந்த நாடுகளில் பெரும்பாலானவற்றில் இருந்த அமெரிக்க ஆதரவு - வலதுசாரி அரசுகள் முற்றிலுமாக மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டன என்பதுடன் புதிய தலைமுறையினர் தங்கள் நாடுகளில் அமெரிக்காவின் தலையீட்டை விரும்ப வில்லை என்றும் அரசியல் பார்வை யாளர்கள் குறிப்பிடுகின்றனர்.



ஒட்டுமொத்தமாக இந்த நாடுகளின் மக்கள் எல்லாம் இடதுசாரி ஆதரவாளர்களாகிவிட்டார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. இந்த நாடுகளில் இருந்த அரசுகள் கெரோனா காலத்தை மிக மோசமாகக் கையாண்டதும் மக்கள் நலனைக் கொஞ்சமும் கருத்தில் கொள்ளாததுமே ஆட்சியாளர்கள் பெருந்தோல்வியைச் சந்திக்கக் காரணம் என்ற கருத்தும் நிலவுகிறது. எப்படியிருப்பினும் இந்த பிராந்தியத்தில் இடது சாரிகளின் செல்வாக்கை நிலைநிறுத்தியதுடன், அமேசான் காடுகள் காப்பாற்றப்படும், பிரேசிலும் புது வாழ்வு பெறும் என்பதைத் தன் வெற்றியின் மூலம் உறுதி செய்திருக்கிறார் லூலா.

ரஞ்சன் அருண் பிரசாத்

# "ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிரான போராட்டம் தொடரும்"

## கொழும்பில் தடையை மீறி திரண்ட மக்கள்

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொழும்பு வீதியில் புதனன்று ஆயிரக்கணக்கில் திரண்ட பொதுமக்கள் குரல் கொடுத்துள்ளனர்.



கொழும்பில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், மாணவர் சங்கங்கள் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து நேற்று முன்தினம் (நவம்பர் 2) அரசுக்கு எதிராக கண்டன பேரணி ஒன்றை நடத்தினார்கள். பொலிசாரின் தடையை மீறி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"அடக்குமுறைக்கு எதிராகவும், பொருளாதார அழுத்தங்களுக்கு எதிராகவும், உரிமைகளுக்காகப் போராடுவோம்" என்ற முழக்கத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியில் பங்கெடுத்தனர்.

பிற்பகல் 3 மணிக்கு மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கிற்கு அருகாமையில் இருந்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பின்னர் அதில் பங்கெடுத்தவர்கள், பேரணியாக கொழும்பு




கோட்டை புகையிரத நிலையத்தை நோக்கி புறப்பட்டனர். இந்த போராட்டத்துக்கு பொலிசார் தடை விதித்திருந்தபோதும், பெருமளவில் திரண்ட மக்கள் கூட்டம் காரணமாக, அவர்களை பொலிசாரால் பேரணி தொடங்கிய வேளையில் தடுத்து நிறுத்தவில்லை.

சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தன.

இந்த போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் நாட்டில் அடக்குமுறை போன்ற சூழலை ஆளும் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தி வருவதால் அந்தப் போக்கைக் கைவிடுமாறு குரல் கொடுத்தனர்.

இந்த போராட்டத்தில் ஐக்கிய மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க, சிறிலங்கா சுதந்திர கட்சியின் தயசிரி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் உள்ளிட்ட பலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

எம்மோடு பேசிய உதயகுமார், "இன்று நாடு பொருளாதார வீழ்ச்சியடைந்திருக்கும் சூழலில் மக்களின் ஆணையின்றி ரணில் விக்ரமசங்க ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கிறார். அவர் அடக்குமுறையைக் கையாண்டு, ஊடகம் மற்றும் கருத்து சுதந்திரத்தை முடக்கி வருகிறார்.

மேலும், மக்களின் அடிப்படை போராடும் உரிமையை கூட பறித்து அவர்களுக்கு எதிராக கைது பிரயோகம் செய்கிறார். பயங்கரவாத சட்டத்தைப் பயன்படுத்தி கைது நடவடிக்கை மேற்கொள்கிறார். இது ஒரு ஜனநாயக நாட்டுக்கு ஏற்புடையதல்ல, இந்த செயல்பாடுகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்," என்று கூறினார்.

### எதிர்க்கட்சி முழு ஆதரவு

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி 100 சதவீதம் ஆதரிப்பதாக சஜித் பிரேமதாச கூறியுள்ளார்.

ஐமச, சுதந்திரக் கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 43ஆவது படையணி உட்பட கிட்டத்தட்ட 20 அரசியல் கட்சிகள் மற்றும் கிட்டத்தட்ட 150 தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இரண்டு பிரதான விடயங்களின் கீழ் அனைத் துக் கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

"அரசாங்கத்தின் அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குதல் ஆகிய இரண்டு கோரிக்கைகள் நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை" என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இன்றைய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அந்த கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் வசந்த சமர சிங்க, "சந்தர்ப்பவாதிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்" என்று கூறியிருக்கிறார்.

இந்த நிலையில், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மௌலவி ஃபீர்ஹான், "எங்களை ஜாதி அடையாளம் மூலமாக பிரித்து வைத்தார்கள். இந்த நாடு பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள் உள்பட எல்லோருக்கும் உரியது. நாங்கள் இங்குதான் பிறந்தோம், இங்குதான் சாவோம். ஒற்றுமையோடு எங்களுடைய பிரச்னையை எதிர்கொள்வோம். ஆனால், ஆட்சியில் இருப்பவர்கள் இந்த நாட்டின் வளர்ச்சியை குட்டிச்சுவர் ஆக்கும் வகையில் செயல்படுகிறார்கள். அதற்கு எதிராக நாங்கள் போராடுகிறோம்," என்கிறார்.

சில வாரங்களுக்கு முன்பு காலி முகத்திடல் போராட்டத்தை முன்னெடுத்ததால் கைது நடவடிக்கைக்கு உள்ளான மௌலவி இஸ்மத் பேசும் போது, "மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் அவரை நாங்கள் வரவேற்போம். ஜனாதிபதி வேலையை ரணில் செய்யாமல் ராஜபக்ஷ குடும்பத்தினர் பிறப்பிக்கும் உத்தரவுகளை செயல்படுத்தி வருவதால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

என்னை இரண்டு முறை சிங்கக் கொடியை வைத்திருந்ததாகக் கூறி கைது செய்தார்கள். ரணில் பதவி விலகட்டும். மக்கள் ஓட்டு போட்டு ஒருவரை ஜனாதிபதியாக தேர்வு செய்யட்டும்," என்று கூறினார்.

### முக்கிய கோரிக்கைகள் என்ன?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் கல்வெவ



சிறிதம்ம தேரர் ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் என்பது போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும்.

பயங்கரவாத தடைச் சட்டம் உட்பட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும் என்றும், கருத்துச் சுதந்திரத்தின் மீதான அரசாங்கத்தின் அடக்கு முறையை இல்லா தொழிக்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இதற்கிடையில், இலங்கை வர்த்தக சம்மேளனம் உட்பட ஆறு முக்கிய வர்த்தக சபைகள், கூட்டறிக்கையில், பேரணி குறித்து கவலைகளை எழுப்பியதுடன், திட்டமிட்ட எதிர்ப்பு அணிவகுப்பை கைவிடுமாறு அனைத்து பிரிவுகளையும் அரசியல் குழுக்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இது போன்ற போராட்டங்களை கைவிடுமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்வதாகவும் வர்த்தக சபைகள் கூறியுள்ளன. (பிபிசி)




# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

**04.11.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**04.11.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ‘விட்டுக்கொடுப்பு’ என்ற சொல் கடந்த காலத்தோடு காலாவதி!

## ஹரீஸின் கருத்துக்கு தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச்செயலாளர் பதிலடி

**அம்பாறை, நவ. 04**

**விட்டுக்கொடுப்பு என்னும் சொல் கடந்த காலத்தோடு காலாவதியாகிவிட்டது. எமக்கு தேவையானதை நாம் பெற்றுக் கொள்வோம் என ஹரீஸ் எம்.பியின் கருத்துக்கு தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி துணைச்செயலாளர் அ.நிதான்சன் பதிலடி கொடுத்தார்.**

அவர் மேலும் கூறுகையில்-

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் “விட்டுக்கொடுப்பு” என்னும் சொல் காலவதியாகிவிட்டது.

33 வருடமாக விட்டுக்கொடுப்பு என்னும் சொல்லில் இனவாத குளிர்காய்ந்தவர்கள் அரசியல் சுகம் அனுபவித்து விட்டார்கள்.

எவ்வித விட்டுகொடுப்புக்களும் இன்றி வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைகள் உள்ளடக்கிய பிரதேச செயலக நிர்வாக ரீதியாக இயங்குவதில் போடப்படும் முட்டுக்கட்டைகளை இடுபவர்களுக்கு இனிவரும் காலங்கள் கடினமானதாக அமையும். 1993ஆண்டு முதல் முழுமையான அதிகாரத்துடன் இயங்க வேண்டிய நிர்வாக அலகினை இயங்கவிடாது தடுத்துவரும் இனவாதிகளுக்கு தக்கபதிலடி விரைவில் வழங்கப்படும். மேலும் வடகிழக்கு இணைப்புக்கு ஒத்துவராத இனவாத முஸ்லிம் தலைவர்கள் இருக்கும் மட்டும் கல்முனை கரையோர மாவட்டமும் கனவாகவே செல்லும்.மேலும் கல்முனை 95 வீத தமிழர்களை கொண்ட நகரம். அங்கு சட்ட விரோத ரீதியாக உருவாக்கப்பட்ட முஸ்லிம் கொலனி (இஸ்லாமாபாத்) இன்று இன ரீதியான பெயரில் இயங்குகின்றது. இதனை ஒரு போதும் ஏற்க முடியாது.

கல்முனைக்குடி கல்முனையாக மாற்றப்பட்டு ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட அரச காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றமை, நாளுக்கு நாள்



நிர்வாக எல்லையினுள் மாற்றங்கள் ,எவ்வித அரச அனுமதியும் இன்றி சட்ட விரோதமாக மாற்றப்படுகின்றமை போன்ற செயல்களை நிறுத்தாத வரைக்கும் விட்டுக்கொடுப்பு எனும் பதம் யாரும் பயன்படுத்தி பலன் இல்லை.

தமிழ்,சிங்கள,முஸ்லிம் மக்களை உள்ளடக்கி நிர்வாகம் செய்யும் வடக்கு பிரதேச செயலகத்தின் செயல்பாடுகளை நிர்வாக முடக்கத்தினை அரசோடு ஒட்டி உறவாடி செயல்படும் இயற்கை நீதிக்கு முரணான விடயங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் சென்று தமது வாக்குகளை கேட்க முடியாமல் இருக்கும் 20ஆவது திருத்ததிற்கு கைகளை உயர்த்திய அரசியல் வாதிகள் இனவாத ரீதியாக அரசியல் தூபமிட்டு தமது பதவிகளை தக்க வைக்க எடுக்கும் ஆயுதமே வடக்கு பிரதேச செயலக விவகாரம் ஆகும்.

இந்த செயல்பாடுகள் இனி வரும் காலங்களில் சரிவராது என புரிந்து கொள்ள வேண்டும்.

அமைச்சரவை அனுமதி இருந்தும் அரச அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான செயல்பாடுகளும் கண்டிக்கத்தக்கன-என்றார். (அ)



# கையை தூக்கிவிட்டு காலில் விழுபவர்கள் நாங்கள் அல்லர்!

## பாராட்டு விழாவில் கலையரசன் எம்.பி.

அம்பாறை, நவ. 04

“வருகின்ற அரசாங்கங்களுக்கு கையை உயர்த்திவிட்டு பின்னர் காலில் விழுந்து சலுகைகள் கேட்பவர்கள் நாங்கள் அல்லர். இரட்டை வேடம் போடுபவர்கள் நாங்கள் அல்லர். என்றும் நாங்கள் துணிகரமாக உண்மைக்காக-நியாயத்திற்காக-உரிமைக்காக தொடர்ச்சியாக ஒரே கொள்கையில் பயணிப்பவர்கள் . நாம் ஒரு போதும் சலுகைக்காக சோரம் போனவர்களல்லர்.”

-இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் காட்டமாக கூறினார்.

சொறிக்கல்முனை ஹொலி குறோஸ் மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சிறிய புஷ்பம், தேசிய விருதான குரு பிரதீபா பிரபா பெற்றதை கௌரவிக்கு முகமாக இடம் பெற்ற விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சொறிக்கல்முனை கல்வி சமூகம் அங்கு சாதனை படைத்த அதிபர் மற்றும் மாணவர்களுக்கு விரிவான பாராட்டு விழா ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தியது .

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக நாவிதன் வெளி பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் கலந்து சிறப்பிக்க, சிறப்பதிகளாக சம்மாந்துறை வலய பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்ஷினி மகேந்திர குமார் , உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, சொறிக்கல்முனை வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் கே. எம்.ஏ.ஷாலினி மற்றும் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் அ.சுதர்சன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மேலும் பேசுகையில்-

இலங்கையை பொறுத்த வரையிலே தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களை இணைத்து ஆளக்கூடிய அரசியல்வாதிகளை உருவாக்க வேண்டும். அப்பொழுது தான் இந்த பிரதேசம் மட்டுமல்ல நாடும் முன்னேற்றம் அடையும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தை முடக்க வேண்டும் என்பதற்காக பல குழுக்களை அமைத்து தமிழ் மக்களின் எதிர்காலத்தை குழி தோண்டி புதைக்கவேண்டும் என்ற வேலை திட்டத்தில் செயல்படுகிறார் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஹரிஸ் என்ற பாராளுமன்ற உறுப்பினர்.

இன்று அவர் ஒரு ஊடக அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். தமிழர்கள் இரட்டை வேடம் போடுபவர்கள் என்று.

நாங்கள் எந்த ஒரு கட்டத்திலும் இரட்டை வேடம் போடவும் இல்லை. போடப் போவதுமில்லை .அது உங்கள் தொழில் நீங்கள் தான் இரட்டை வேடம் போடுபவர்கள். இதனை முழு நாடும் அறியும்.

நாட்டிலேயே தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் செயல்படும் ஒரேயோரு கட்சி எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் தான் என்பதை ஆணித்தரமாக கூறுவேன் .-என்றார். (அ)



# உயர்தர மாணவர்களுக்கான ஊடகக் கற்கை செயலமர்வு!

மட்டக்களப்பு, நவ. 04

மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் ஏற்பாட்டில் தகவல் திணைக்களத்தின் அனுசரனையுடன் மட்டக்களப்பு மத்தி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் உயர்தர மாணவர்களுக்கான ஊடகக் கற்கை செயலமர்வொன்று நேற்று முன் தினம் காத்தான்குடியில் இடம்பெற்றுள்ளது.

க.பொ.த.உயர் தரத்தில் ஊடகக்கற்கைநெறியை ஒரு பாடமாகக் கற்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான ஊடக செயலமர்வே நேற்று முன்தினம் புதன் கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரனின் ஆலோசனைக்கு அமைவாக, மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் பொறுப்பதிகாரி வடிவேல் ஜீவாநந்தன் தலைமையில் காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பி.ப.1.30 மணிவரை இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ. நவேஸ்வரன் குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (அ)

# கிழக்கில் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு சமூக வலைத்தளங்கள் கையாளும் பயிற்சி

அம்பாறை, நவ. 04

சமூக வலைத்தளங்களை கையாளும் முறை தொடர் பான பயிற்சி பட்டறைகள் கிழக்கு மாகாணம் எங்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் ஐ.நா. அபிவிருத்தி திட்ட நிறுவனத்தின் அனுசரணையில், சி.டி.எல்.ஜி. திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில்



செயல் படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களில் 50 வயதுக்கு குறைந்த ஆண், பெண் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்காக இப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்துக்கான முதல் பயிற்சி பட்டறை அக்கரைப்பற்று மாநகர சபை மண்டபத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றது.

அங்கு சமூக வலைத்தளங்களை கையாளுதல் தொடர்பாக விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. (அ)

## சீன கைபேசிகளுக்கு தடை!

நியூயோர்க், நவ



சில சீன கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதை இடைநிறுத்துவதற்கு அமெரிக்கா தயாராகி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அமெரிக்க பெடரல் கம்யூனிகேஷன்ஸ் கொமிஷன் இந்த முடிவை எடுக்க உள்ளது.

அதன்படி, Huawei, ZTE, Hytera Communications Corp, Hangzhou Hikvision Digital Technology Co மற்றும் Zhejiang Dahua Technology Co ஆகியவற்றிலிருந்து கையடக்க தொலைப்பேசிகளை மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களின் விற்பனையை தடை செய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அந்தந்த நிறுவனங்களின் தயாரிப்புகள் தொடர்பாக அமெரிக்கா விசேட ஆய்வொன்றை நடத்தியதாகவும், அந்த ஆய்வின் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# நைஜீரியாவில் 39 சிறுவர்கள் துப்பாக்கி முனையில் கடத்தல்!

### ஆயுதமேந்திய கும்பல் அடாவடி

அபுஜா, நவ. 04



வடமேற்கு நைஜீரியாவில் பண்ணை ஒன்றில் பணிபுரிந்து வந்த 40 சிறுவர்களை ஆயுதமேந்திய கும்பல் கடத்திச் சென்று, அவர்களை விடுவிக்கக் கப்பம் கோரியுள்ளது என அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்சினா மாநிலத்தின் பஸ்கரி மாவட்டத்தில் உள்ள மைருவா கிராமத்துக்கு வெளியே உள்ள பண்ணை ஒன்றில் கூலிக்குப் பயிர்களை அறுவடை செய்து கொண்டிருந்த 39 சிறுவர், சிறுமிகளை வாகனங்களில் வந்த துப்பாக்கிதாரிகள் இவ்வாறு கடத்தியுள்ளனர் என்று கட்சினா பொலிஸ் செய்தித் தொடர்பாளர் காம்போ இசா கூறினார்.

பண்ணைக்குள் கொள்ளையர்கள் நுழைந்த போது, அங்கு பணிபுரிந்த பெரியவர்கள் தப்பியோடினர் என்றும், துரதிஷ்டவசமாக சிறுவர்கள் சிக்கிக்கொண்டனர் என்றும் சம்பவத்தை நேரில் அவதானித்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட சிறுவர்கள் 15-18 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்திய சிறுவர்களை விடுவிப்பதற்கு, குறித்த பண்ணையாளரிடம், 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களைக் கடத்தல்காரர்கள் கப்பமாகக் கோரியுள்ளனர் என்றும், கடத்தப்பட்ட ஒருவரிடமிருந்த கைபேசி மூலம் அவர்கள் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பணயக்கைதிகளை மீட்பதற்கும் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கும் அப்பகுதிக்குத் தமது குழுவினர் விரைந்துள்ளனர் என்று கட்சினா பொலிஸ் செய்தித் தொடர்பாளர் காம்போ இசா மேலும் தெரிவித்தார். (அ)

# அமெரிக்காவில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு குளிர்கால நிதி உதவி

நியூயோர்க், நவ. 04



அமெரிக்காவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு ஜோ பைடன் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

குளிர்கால வெப்பச் செலவுகளை குறைப்பதற்காக இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதற்கமைய, 13.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்குவதாக அமெரிக்க சுகாதார மற்றும் மனித வள சேவைப்பிரிவு அறிக்கையொன்றினூடாக அறிவித்துள்ளது. குளிர் காலத்தில் வீடுகளை வெப்ப மாக்குவதற்கான கட்டணம் கடந்த வருடத்தை விட இந்த வருடம் 28 வீதம் வரை அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் 90 வீதமான குடும்பங்கள், குளிர் காலத்தில் வெப்பத்தை பெற்றுக் கொள்வதற்காக இயற்கை எரிவாயு அல்லது மின்சாரத்தை நம்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## ஒரே பெயரைக் கொண்ட 178 நபர்கள் ஒரே இடத்தில் கூடி கின்னஸ் சாதனை



ரோக்கியோ, நவ. 04

ஜப்பானில் ஹிரோகசு ரனகா என்ற பெயருடன் கூடிய 178 நபர்கள் ஒரே இடத்தில் கூடி கின்னஸ் சாதனை படைத்துள்ள சம்பவம், இணையத்தில் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது.

இதில், 3 வயது குழந்தை முதல் 80 வயது முதியவர் வரை வயது வரம்பின்றி பலரும் கலந்துள்ளனர்.ஹிரோகசு ரனகா என்ற அமைப்பு இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து உள்ளனர்.

இதற்கு முன்பாக கடந்த 2005 ஆம் ஆண்டு மார்தா ஸ்ரிவட்ஸ் என்ற பெயருடைய 164 நபர்கள் நிகழ்ச்சி ஒன்றில் கூடியிருந்தது தான் சாதனையாக இருந்தது. (அ)

## அணு ஆயுதப் போர் ஏற்பட்டால் யாருக்கும் வெற்றி கிடைக்காது

### ரஷ்ய ஜனாதிபதி கூறுகிறார்



மொஸ்கோ, நவ. 04

அணு ஆயுதப் போர் ஏற்பட்டால் யாருக்கும் வெற்றி கிடைக்காது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதப்போர் எப்போதும் நிகழக்கூடாது என்றும், உக்ரைன் விவகாரத்தில் மேற்கத்திய நாடுகள் அணு ஆயுதப் போரைத் தூண்டி விடவேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அணு ஆயுத மோதலை தவிர்க்கவே ரஷ்யா விரும்புவதாகவும் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் அணு உலைகள் பாதுகாப்பு குறித்து சர்வதேச அணுசக்தி கழகம் கவலை வெளியிட்டுள்ள நிலையில், இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் ரஷ்யாவின் அணு ஆயுத நிலைப்பாடு மற்றும் கொள்கை குறித்து அவர் விளக்கம் அளித்துள்ளார். (அ)

# குடியேறிகள் எண்ணிக்கையை ஐந்து இலட்சமாக்கவுள்ள கனடா

### தொழிலாளர் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வெளிநாட்டவருக்கு தாராள வதிவிட அனுமதி

மொன்றியல், நவ. 04



கனடாவின் சமஷ்டி அரசு நாட்டுக்குள் உள்வாங்குகின்ற வெளிநாட்டுக் குடியேறிகளின் எண்ணிக்கையைப் பெரிய அளவில் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. குடியேறிகளுக்கு நிரந்தர வதிவிடம் வழங்குவதை அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்து அதனை 2025 முதல் வருடாந்தம் ஐந்து லட்சங்களாக உயர்த்துவதற்குக் குடியேற்ற அமைச்சு முடிவு செய்துள்ளது.

புதிய குடியேற்றத் திட்டத்தின் விவரங்களைக் குடிவரவு மற்றும் குடியுரிமை, அகதிகள் விவகார அமைச்சர் சீன் ஃப்ரேசர் செவ்வாய்கிழமை வெளியிட்டார்.

தொழில் திறமை மற்றும் தொழில் அனுபவத்தின் அடிப்படையில் குடியேறிகளை உள்வாங்குவது அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக அதிகரிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள பத்து லட்சம் தொழிலாளர்களுக்கான வெற்றிடங்களை வெளிநாட்டுக் குடியேறிகளைக் கொண்டு நிரப்ப வேண்டியது கனடாவின் பொருளாதாரச் செழிப்புக்கு அவசியம் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கனடா சுகாதாரம், உற்பத்தி, பொறியியல், தொழில் நுட்பம் போன்ற துறைகளில் பெரும் ஊழியர் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. அதனைச் சமாளிப்பதற்காக நாட்டுக்குள் அனுமதிக்கின்ற குடியேற்றவாசிகளில் 60 வீதமானவர்களைப் பொருளாதாரக் குடியேறிகளாக உள்வாங்கி அவர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்குவது கனடா அரசின் இலக்காக உள்ளது. அதேசமயம் கனடாவில் வசிப்போர் தங்கள் குடும்ப உறுப்பினர்களை ஒன்றிணைப்பதைத் துரிதப்படுத்தும் அதேவேளை நாட்டுக்குள் அகதிகளை வரவேற்பதைக் குறைப்பதும் அரசின் புதிய திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு கனடா 4லட்சத்து 5ஆயிரம் வெளிநாட்டுக் குடியேறிகளை நாட்டுக்குள் அனுமதித்துள்ளது. அது இதற்கு முன்னர் என்றும் இருந்திராத பெரும் எண்ணிக்கை ஆகும். (அ)

ஈழநாடு





## ரென்னிஸ் சம்பியன்ஷிப் ஸ்வியாரெக் வெற்றி!

போர்த்வொர்த், நவ. 04

முதல்நிலை வீராங்கனையான ஸ்வியாரெக் பெண்களுக்கான சம்பியன்ஷிப் தொடரை வெற்றியுடன் தொடக்கியுள்ளார்.

பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி அமெரிக்காவின் போர்த் வொர்த் நகரில் நடக்கிறது.

தரவரிசையில் “முதல் -8“ இடங்களை வகிக்கும் வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ள இந்தத் தொடரில் அவர்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு றொபின் - சுற்று முறையில் மோதுகிறார்கள்.

நேறறு முன்தினம் “டிராசி அஸ்டின்“ பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் “முதல்நிலை“ வீராங்கனை இகா ஸ்வியாரெக் (போலந்து) 6-2, 6-3 என்ற நேர் செற்றில் டாரியா கசட்கினாவை (ரஷ்யா) வீழ்த்தி வெற்றியுடன் இந்த தொடரை தொடங்கினார். (ஐ)

# பங்களாதேஷ் அணியை போராடி வென்றது இந்தியா!

அடிலெய்ட், நவ. 04

பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியை இந்திய அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் அடிலெய்டில் நடந்த போட்டியில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் விளையாடின.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 184 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணிக்காக கே. எல். ராகுல், கோலி மற்றும் சூர்யகுமார் யாதவ் ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர்.

185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பங்களாதேஷ் விரட்டியது. அந்த அணி 7 ஓவர்கள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 66 ஓட்டங்களை எடுத்திருந்தது. அப்போது மழை குறுக்கிட்டது. பின்னர் டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி 16 ஓவர்களில் 151 ஓட்டங்கள் எடுத்தால் பங்களாதேஷ் வெற்றி பெறலாம் என அறிவிக்கப்பட்டது. ஏற்கெனவே 66 ஓட்டங்கள் எடுத்திருந்த காரணத்தால் 9 ஓவர்களில் 85 ஓட்டங்கள் எடுத்தால் பங்களாதேஷ் வெற்றி பெறலாம் என்ற நிலை. அந்த அணியின் வசம் 10 விக்கெட்கள் இருந்தன.

இப்படி அனைத்தும் பங்களாதேஷுக்கு சாதகமாக இருந்தது. மழைக்கு முன்பாக லிட்டன் தாஸ், விக்கெட்டை வீழ்த்த போராடியது இந்தியா. ஏனெனில், அவர் மட்டுமே அப்போது 26 பந்துகளில் 59 ஓட்டங்களை குவித்திருந்தார். மழைக்கு பின்னர் மீண்டும் போட்டி தொடங்கிய முதல் ஓவரில் ரன் அவுட்டாகி வெளியேறினார். அவர் 60 ஓட்டங்கள் எடுத்திருந்தார். கே. எல். ராகுல் அபாரமாக பந்தை எறியவே அது நேரடியாக விக்கெட்டை தாக்கி இந்த ஆட்டமிழப்பைச் செய்தார்.

அங்கிருந்து பங்களாதேஷ் அணி ஒவ்வொரு விக்கெட்டாக இழக்க தொடங்கியது. ஷான்டோ, ஹுசைன், ஷகீப், யஸீர் அலி, எம் ஹுசைன் போன்றவர்கள் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர்.

இருந்தும் கடைசி சில ஓவர்களின்போது டஸ்கின் அகமது மற்றும் விக்கெட் காப்பாளர் ஹசன் என இருவரும் இறுதி வரை விடாமல் இலக்கை துரத்தினர். 15ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர் மற்றும் ஒரு பௌண்ட்ரி அடித்து மிரட்டி இருந்தார் டஸ்கின். கடைசி ஓவரில் 20 ஓட்டங்கள் பங்களாதேஷுக்கு தேவைப்பட்டது.



அந்த ஓவரை அர்ஷ்தீப் வீசி இருந்தார். முதல் பந்தில் ஓர் ஓட்டம். அடுத்த பந்தில் சிக்ஸர். அதற்கடுத்த பந்தில் ஓட்டமில்லை. நான்காவது பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்தது பங்களாதேஷ் 2 பந்துகளில் 11 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் அந்த அணி இருந்தது.

ஐந்தாவது பந்தில் பௌண்ட்ரி எடுத்தார் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான ஹசன். கடைசி பந்தில் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டது. சிக்ஸர் அடித்தால் போட்டி சுப்பர் ஓவருக்கு செல்லும் நிலை. ஆனால், அந்த பந்தில் ஓர் ஓட்டம் மட்டுமே எடுத்தது பங்களாதேஷ். 16 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 145 ஓட்டங்களை எடுத்தது அந்த அணி. அதனால் இந்தியா வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பில் அர்ஷ்தீப் விக்கெட்கள், பாண்ட்யா 2 விக்கெட்கள், ஷமி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தார். இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகளில் விளையாடி 3 வெற்றி மற்றும் 1 தோல்வி யுடன் சுப்பர் 12 குழு - 2இல் 6 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது இந்தியா. (ஐ)

# இருபது - 20 தரவரிசை சூரியகுமார் முதலிடம்



டுபாய், நவ. 04

இருபது - 20 போட்டியில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில் முதன் முறையாக இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது.

இந்நிலையில், ஐ. சி. சி. துடுப்பாட்ட தர வரிசையை வெளியிட்டது.

இதில், சூர்யகுமார் யாதவ் (863 புள்ளிகள்) முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்த பட்டியலில் நீண்ட காலமாக முதலிடத்தில் இருந்த பாகிஸ்தான் அணியின் ரிஸ்வானை (842 புள்ளிகள்) பின்னுக்கு தள்ளி அவர் முதலிடம் பிடித்துள்ளார். இதே நேரத்தில் நியூசிலாந்தின் டெவோன் கொன்வே 792 புள்ளிகளுடன் தனது மூன்றாம் இடத்தைத் தக்க வைத்துள்ளார்.

சூர்யகுமார் யாதவ் தவிர, இருபது - 20 துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ. சி. சி தரவரிசையில் முதல் 10 இடங்களில் உள்ள மற்ற இந்திய வீரர் விராட் கோலி மட்டும்தான் (10ஆவது இடம்).

இலங்கையின் வீரர்கள் எவரும் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெறவில்லை.

(ஐ)



## பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ்; ரபேல் நடால் அதிர்ச்சி தோல்வி!

பாரிஸ், நவ. 04

பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் இரண்டாவது சுற்றில், ஸ்பானிய வீரர் ரபேல் நடால் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்று போட்டியில் நடாலை அமெரிக்காவின் டொமி போல் தோற்கடித்தார்.

36 வயதான நடால் 22 கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களை வென்றவர். சர்வதேச ஆடவர் டென்னிஸ் தரவரிசையில் உலகின் முன்னாள் முதல் நிலை வீரரான அவர் தற்போது 2 ஆவது நிலை வீரராக உள்ளார்.

இச்சுற்றுப்போட்டியில் நடால் சம்பியனானால் அவர் ஆடவர் டென்னிஸ் தவரிசையில் மீண்டும் முதலிடத்தை அடையும் வாய்ப்பு இருந்தது.

எனினும், 2 ஆவது சுற்றில், நடாலை 3-6, 7-4, 6-1 விகிதத்தில் டொமி போல் வென்றார். (ஐ)

# இலங்கையில் கருத்து சுதந்திரம் கட்டுப்பாடுகளினால் பாதிப்பு!

## சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 04

**தொழிற்சங்கங்கள், மாணவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் போராட்டத்திற்கு பொலிஸ் அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளமை கவலையளிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.**

அமைதியான முறையில் கூடும் போராட்டங்கள் போன்ற அடிப்படை மனித உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு, எதிர்ப்பாளர்கள் அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை என்றும் அந்தச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

பொலிஸ் மேற்கோள் காட்டிய போராட்டத்துக்கு அனுமதி மறுப்பதற்கான காரணங்கள் குறித்து தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச சட்டத்தின்படி அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கு எதிரான சட்டபூர்வமான கட்டுப்பாடுகள் இல்லை என்று தெரிவித்துள்ளது.

கட்டுப்பாடுகள் கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கின்றன என தெரிவித்துள்ள அந்தச் சபை, அமைதியான முறையில் ஒன்று கூடும் சுதந்திரம் என்பது ஒரு உரிமை என்றும் அது சலுகை அல்ல என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இந்த உரிமையை எளிதாக்குவதற்கு அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை மேலும் கூறியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கோட்டை ரயில் நிலையத்தை நோக்கி பேரணியாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

முன்னதாக கொழும்பு ரயில் நிலையத்திற்கு முன்பாகவோ அல்லது அருகாமையிலோ போராட்டம் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என பொலிஸார் அறிவித்தல் விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நவ. 8 ஆம் திகதி சந்திர கிரகணம்

கொழும்பு, நவ. 04

எதிர்வரும் 8 ஆம் திகதி பகுதியளவான சந்திரக் கிரகணம் ஏற்படும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சந்திரக் கிரகணம் அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளுக்கு முழு அளவிலான சந்திர கிரகணமாக தென்படும் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, 8 ஆம் திகதி மாலை 5.48க்கு சந்திரன் உதயமாகும் என்பதுடன், சந்திரக் கிரகணத்தின் இறுதிப் பகுதியை இலங்கையில் காண முடியும்.

மாலை 6.19 மணிக்கு பகுதியளவான சந்திரக் கிரகணம் நிறைவடையும் என பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் முழு அளவிலான சந்திரக் கிரகணத்தை பார்வையிட முடியும். (அ)

# ரயில் நேர அட்டவணையை திருத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, நவ. 04

அனைத்து ரயில் மார்க்கங்களினதும் நேர அட்டவணையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாகப் பதிவாகும் ரயில் தாமதத்தை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் டி.எஸ்.குணசிங்க தெரிவித்தார்.

உத்தேச திருத்தத்திற்கு அமைய, ஒவ்வொரு ரயில் சேவை நேரத்திலும் 15 அல்லது 20 நிமிட மாற்றம் ஏற்படலாம் என அவர் கூறினார்.

இந்த திருத்தங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்

இதற்கு முன்னர் கரையோர ரயில் மார்க்க நேர அட்டவணை திருத்தப்பட்டது. (அ)

# 21 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு அபாயநிலை!

கொழும்பு, நவ. 04

21 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதி அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

இவற்றில் 09 பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிலியந்தலை, ஹாரிஸ்பத்துவ, உக்குவெல, பதுளை, கேகாலை மற்றும் மாவனெல்ல ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் புதிதாக இனங்காணப்பட்டுள்ள அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இவ்வருடத்தின் 43ஆவது வாரத்தில் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் 143 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 7,296 ஆக இருந்த போதிலும், இந்த வருடம் அந்த எண்ணிக்கை 14,937 ஆக அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் இலங்கையில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 62,435 ஆக அமைந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

# இந்திய விநியோகஸ்தர்களிடம் நேரடியாக மருந்து கொள்வனவு

கொழும்பு, நவ. 04

நாட்டுக்கு தேவையான மருந்துகளை இந்திய மருந்து விநியோகஸ்தர்களிடம் இருந்து நேரடியாக கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முன்பதிவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திர குப்த தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 150 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், முன்பதிவு செய்யப்பட்ட மருந்துகள் எதிர்வரும் 14 நாட்களில் நாட்டுக்கு கொண்டுவரப்படும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்திய கடன் வசதியின் கீழ் மருந்துகள் உட்பட சுமார் 1,700 பொருட்கள் பெறப்படவுள்ளதாகவும் பொருட்கள் மற்றும் மருந்துகளை கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, காலாவதியான பைஸர் தடுப்பூசிகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# பச்சை நிறமாக மாறிய கடல் நீர்!



கொழும்பு, நவ. 04

புத்தளம் மாவட்டத்தின் சில பகுதிகளில் கடல் நீர் பச்சை நிறமாக மாறியுள்ளது.

நேற்று முன் தினம் காலை முதல் புத்தளத்தின் கற்பிட்டி முதல் வென்னப்புவ வரையிலான கடல் கொத்தளிப்புடன் காணப்பட்டதுடன், கடல் நீரும் பச்சை நிறமாக மாறியுள்ளதாக மீனவர்கள் குறிப்பிட்டனர்.

நுண்ணுயிர் தாவரங்கள் அதிகரித்துள்ளமையே இதற்கான காரணம் என நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடல் மாசடையும்போது இவ்வாறான நிலைமை ஏற்படுவதாகவும், இதற்கு முன்னர் காலி முகத்திடல் உள்ளிட்ட சில பகுதிகளில் கடல் நீரின் நிறம் மாறியதை காண முடிந்ததாகவும் நாரா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# நீதிமன்றில் பொலிஸ் அதிகாரியை தாக்கிய நபருக்கு விளக்கமறியல்

கொழும்பு, நவ. 04

நீதிமன்றத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அச்சுறுத்தியமை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா நீதவான் நீதிமன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர், நீதிமன்றில் அமைதியாக இருக்குமாறும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்தால் நீதிமன்றத்தை விட்டு வெளியேறுமாறும் சம்பந்தப் பட்ட நபருக்கு பணித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, குறித்த சந்தேகநபர் பொலிஸ் உத்தியோகத்தரை அச்சுறுத்தி, தாக்கியதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது நீதிமன்ற வளாகத்தில் இருந்த ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நானுஓயாவை பகுதியைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபர், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## தமிழர்...

பிரச்னைகளை நாம் பேசித்தீர்த்து வைப் போம்"- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

"மாதத்துக்கு ஒரு கேள்வி" எனத் தன்னிடம் எழுப்பப்படும் கேள்விக்கு விக்னேஸ்வரன் எம். பி. பதிலளிப்பது வழக்கம். இதன் அடிப்படையில், "தமிழர்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்னை உண்டு என்று பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த் தன கேட்டுள்ளார். அதற்கு பதில் அளிப் பீர்களா?", என்று எழுப்பப்பட்ட கேள் விக்கு அவர் அளித்துள்ள பதிலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நீண்ட அந்தப் பதிலின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

நாடு சுதந்திரம் அடையும் வரை தமிழர்கள் இங்கு நாடு பூராகவும் பக்கு வமாகவும் பாதுகாப்புடனும் வாழ்ந் தார்கள். சட்டத்தின் முன் யாவரும் சமமே என்ற நிலை ஆங்கிலேயர் காலத் தில் இருந்தது. ஆங்கில மொழியானது மக்களை ஒன்றிணைத்தது. நாம் யாவ ரும் இலங்கையர் என்ற எண்ணத்துடன் இன, மொழி, மத வேறுபாடின்றி வாழ்ந்த மக்களின் அந்நியோன்யம் "சிங்களம் மட்டும்" சட்டம் வந்ததும் நீங்கியது. "நாம்" என்று பன்மையில் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தவர்கள் "நான் சிங்களவன்", "நீ தமிழன்", "நீ முஸ்லிம்", என்று பேசத் தொடங்கினர்.

இன்று சிங்களவர்கள் பலர் கேட்கும் கேள்வி ஆங்கிலம் இருந்த இடத்தில் பெரும்பான்மை மொழியான சிங்களம் அதற்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட் டது. சிங்களம் எம் உள்ளூர் மொழி. முன்னர் போல் நாம் ஏன் இலங்கையர் என்று எம்மை அடையாளங் காட்ட மறுக்கின்றோம் என்பது. வட, கிழக்கில் தமிழ்தான் பெரும்பான்மை மொழி அங்கு ஏன் சிங்களத்தைத் திணிக்க வேண் டும் என்று அவர்கள் சிந்திப்பதில்லை.

இலங்கையில் "சிங்களம் மட்டும்" சட்டம் கொண்டு வரப்பட்டதுமல்லா மல் நாட்டில் பரவலாக வாழ்ந்த தமிழ் மக்கள் கலகங்கள், காணி அபகரிப்பு, அரசாங்க தனி மொழிச்சட்டம் போன்ற பலவற்றின் காரணமாக சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் இடங் களில் இருந்து படிப்படியாக விரட்டி அடிக்கப்பட்டு தற்போது வட, கிழக் கில் மட்டும் தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாக வாழும் நிலைமை ஏற்பட் டுள்ளது.

சிங்கள பிரதேசங்களில் இருந்து தமி ழர்கள் விரட்டப்பட்டு பலர் அகதி களாக வெளிநாடுகள் சென்று விட்ட னர். சிலர் தமது பூர்வீக வட, கிழக்கு இடங்களுக்குச் சென்றுள்ளனர். இவர் கள் பலரை இங்கும் இருக்க விடாமல் போரின் போது விரட்டி அடித்தன சிங் கள அரசாங்கங்கள். இன்றும் வடகிழக் கில் பெருவாரியாகப் படையினர் நிலை கொண்டிருக்கின்றனர். எமது காணிகள் அவர்கள் வசம். பயிரிட்டு பயன்பெறு கின்றனர். எமது வியாபாரங்கள் அவர் கள் வசம். சுற்றுலாப் பயணிகளுக்கு உணவகங்கள் ஒரு புறம். ஏ-9 வீதியில் ஆங்காங்கே படையினர் அல்லது பொலிஸாரின் அனுசரணையுடன் தேநீர் கடைகள் மறுபுறம்.

பௌத்தர்கள் வாழாத இடங்களில் புத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. தமிழர்களின் மக்கள் தொகையைக் குறைக்கும் வண்ணம் நில ஆக்கிரமிப் புக்களும் சிங்கள குடியேற்றமும் நடை பெறுகின்றன.

எமது மீனவர்களை தமது பாரம் பரிய மீன்பிடி இடங்களில் மீன் பிடிக்க விடாமல் தடுத்து தெற்கிலிருந்து வரும் மீனவர்களுக்கு மீன் பிடிக்க விட்டிருக் கின்றனர் படையினர். பல இடங்களில் அவர்கள் சட்டத்திற்கு மாறான முறை யில் மீன் பிடித்து தெற்குக்கு அனுப்பு கின்றனர். வருமானத்தை தாம் எடுக்கின் றனர். எமது மீனவர்கள் பல விதத்திலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். சுதந்திரம் அற்று வாழ்ந்து வருகின்றனர். தமது பாரம்பரிய வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர்.

இப்பொழுது தமிழர் இடங்களில் சிங்களவர்களை வாழவிடுகின்றார்கள் இல்லை என்று ரோகித போன்றவர்கள் அங்கலாய்க்கின்றனர். முன்னர் சிங்கள வர் வாழ் இடங்களில் இருந்து தமிழர் களை விரட்டாது இருந்திருந்தார்களே யானால் இவ்வாறு கூறலாம். எம்மை அங்கிருந்து விரட்டி விட்டு எவ்வாறு நாம் வாழும் வீட்டுக்கு வந்து எமது வீட்டினுள் நுழைய முடியவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள் ரோகித போன்றவர்கள். ரோகித அபேகுண வர்த்தன தமிழர்களுக்கு என்ன பிரச்னை என்று கேட்கின்றார்.

இப்போது, "வடக்கு கிழக்கில் இருந் தும் தமிழர்கள் விரட்டப்படுகின்றனர்", "பெருவாரியான படையினர் எம்மை மெய்நிகராக சிறைப்படுத்தி வைத் துள்ளனர்", "எமது சுதந்திரம் பறிபோய் விட்டது", "தமிழருக்கு வேலை வாய்ப் பில்லை", "போதைப் பொருளை மர்ம கரங்கள் ஊக்குவிக்கின்றன", "மாகாண சபைகள் இயங்கவில்லை என்பன உள் ளிட்ட 17 முக்கிய பிரச்னைகளை அவர் பட்டியலிட்டுள்ளார். (ஐ)

## முன்மொழிவு...

தேசிய சபையை ஸ்தாபிக்கும் நட வடிக்கை மாத்திரமே இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்மொழியப் பட்ட யோசனைகளில் வங்கி விவகார மற்றும் நிதிச் சேவைகள் தொடர்பான குழு, பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குழு, வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு ஆகிய வற்றை வங்கி விவகாரங்கள் தொடர் பில் நியமிப்பதற்கு முன்மொழியப்பட் டாலும் அவை இதுவரை முன்னெடுக் கப்படவில்லை.

அத்துடன், துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதி நிதிகளை நியமிக்கவும், பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவவும் முன்மொழியப்பட்டபோதும் அவையும் செயல்படுத்தப்படவில்லை.

இந்த பரிந்துரைகளின்படி 17 பாரா ளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிக்க வேண்டியுள்ள போதிலும் அவற்றுக்கான தலைவர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. அவற்றுக்கு நியமிக்கப்படும் இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல் இன்னும் தயாரிக்கப்பட வில்லை.

அடுத்த வருட வரவு - செலவுத் திட் டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இந்த முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்த முடியும் எனவும் இதனால் அர சாங்கம் எதிர்பார்க்கும் முறைமை மாற் றம் மிக விரைவாக எட்டப்படும்.

பாராளுமன்ற வரவு - செலவு திட்ட அலுவலகத்துக்கான சட்டமூலத்துக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள் ளதுடன், கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்து, சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்ற பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்பிக்க உத்தேசித் துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள ஜனா திபதி , இது தொடர்பில் விசேட கவ னம் செலுத்துமாறு சபாநாயகருக்கு அறி வித்துள்ளார். (ஐ)

# இம்ரான்கான்மீது துப்பாக்கிச் சூடு!

இஸ்லாமாபாத், நவ. 04

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

குஜ்ரன்வாலா நகரில் பேரணியொன் றில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது வலது காலில் காய மடைந்த முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்ட நபர் கைது செய்யப்பட் டுள்ளாரென அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆட்சியிலுள்ள ஷெபாஷ் ஷெரீப் பின் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெ டுக்கப்படும் நீண்ட பேரணியின் இடை யில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பேரணியில் உரையாற்றுவதற்காக வாகனம் ஒன்றில் நின்றுகொண்டிருந்த போதே இம்ரான் கான் மீது துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட் டுள்ளது. தலைநகர் இஸ்லாமா பாத்திலிருந்து சுமார் 200 கிலோமீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ஐ)

## கடன்...

வெளிப்படைத்தன்மையுடன் எதிர்கால நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு இலங்கை முழுமையாக அர்ப்பணிப் புடன் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக மட்ட அனுமதியை பெறுவதும் மற்றொரு முக்கிய ஒரு மைல்கல்லாக இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இங்கு உரையாற்றிய இலங்கை மத் திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்த லால் வீரசிங்க,

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டங்கள் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரலும் இலங்கையின் நிதிப் பாதுகாப்பை மீட்டெடுக்கும். இலங் கையின் தற்போதைய நிதி நிலைமை மற்றும் சீர்திருத்தங்களின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவதற்கான வாய்ப்பைப் பெற்ற இந்த ஆக்கபூர்வ மான கூட்டத்தில் எங்களுடன் இணைந் ததற்காக உத்தியோகபூர்வ கடன் வழங் குநர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

2022 செப்ரெம்பர் 01 ஆம் திகதி, இலங்கை சர்வதேச நாணய நிதியத் துடன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஆதரவுடன் நான்கு வருட வேலைத்திட் டத்திற்காக அதிகாரிகள் மட்ட இணக் கம் எட்டப்பட்டது. 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் திட்டமானது பெரும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் மீட்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் அதே வேளையில் பாதிக் கப்படக் கூடியவர்களை பாதுகாக்கும் மற்றும் இலங்கையின் நிலைத்தன்மை மற்றும் நிதி கட்டமைப்பை பாதுகாக் கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தம் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட் பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இலங்கையில் இலக்கு ரீதியான சீர்திருத்தங்களை மையமாகக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் சீர் திருத்த நிகழ்ச்சி நிரல் நான்கு விடயங் களை அடிப்படையாகக் கொண்டது:

இதில் முதல் விடயம் நிதி சீர்திருத் தம். வருமான நிர்வாக சீர்திருத்தங்களு டன் இணைந்து, அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் இருந்து எழும் நிதி அபாயங்களைக் குறைத்து, மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கு விலைப் பொறி முறை ஒன்றை அறிமுகப்படுத்துவது டன் வருமான இலக்கு அடிப்படையி லான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக் கைகளை செயல்படுத்த திட்டமிடு கிறது. மிகவும் பாதிக்கப்படக்கூடிய வர்களை பாதுகாக்க, தற்போதுள்ள சமூக பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்துவதும் இதில் அடங்கும்.

இரண்டாவது விடயம், அரச கடன் நிலைத்தன்மையை மீளமைப்பதாகும். இலங்கையின் கடன் நிலைமை சர்வ தேச நாணய நிதியத்தால் நீடிக்க முடி யாததாகக் கருதப்பட்டு, நீட்டிக்கப் பட்ட கடன் வசதி மூலம் தீர்வு காணப் பட்டுள்ளது.

மூன்றாவதாக, விலை ஸ்திரத்தன் மையை வழமை நிலைக்கு கொண்டு வருவது மற்றும் வெளிப்புற பாது காப்பை மீண்டும் உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனமாக செயற் படுவதை வலுப்படுத்துவதற்கான கொள் கைக் கட்டமைப்பை நவீனமயப்படுத் தும் சட்டம் ஒன்று விரைவில் அமைச் சரவையின் அனுமதியை பெற்று நிறை வேற்றப்பட உள்ளது.

வேலைத்திட்டத்தின் நான்காவது விடயம், இலங்கையின் பொருளாதா ரத்தை புத்துயிர் பெறுவதற்கான முக் கிய நிபந்தனையான நிதி ஸ்திரத்தன் மையைப் பேணுவதாகும். இலங்கை யின் வங்கி முறைமை போதுமான அளவு மூலதனமாக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலமும் அதன் அரச வங்கி களின் தாங்கும் தன்மை மற்றும் நிர்வா கத்தை வலுப்படுத்துவதன் மூலமும் இது அடையப்படும்.

இந்த விடயங்களுக்கு மேலதிகமாக, இலங்கையின் சட்ட கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு ஏற்ப கொண்டு வரு வதோடு, இலங்கையின் வளர்ச்சித் திறனை மேம்படுத்த விரிவான கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை செயல்படுத் தும். ஊழல் எதிர்ப்பு சீர்திருத்தங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் - என் றார்.

## மாற்றங்கள்...

யுள்ளார். நேற்றைய போராட்டம் தொடர் பில் ஜனாதிபதி கருத்து வெளியிடுகையி லேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மக்கள் விரும்பிய மாற்றங் கள் ஏற்பட்டு விட்டன. அதனால் அவர்கள் இப்போது போராட்டத்தை விரும்பவில்லை. எதிரணி அரசியல் வாதிகளும் அவர்களின் சகாக்களும் தான் இப்போது வீதிகளில் இறங்கிப் போராடுகின்றனர். எதிரணியினர் தங்கள் சுயலாப அரசியலுக்காகவே போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால், போராட்டங்களால் ஒன்றும் நடக்கப்போவதில்லை.

அவசியமற்ற இந்தப் போராட்டங் களை நிறுத்திவிட்டு நாட்டை மீளக் கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும் என்று எதிரணிக்கு நான் மீண்டும் அழைப்பு விடுக்கிறேன் - என்றும் ஜனா திபதி கூறினார். (ஐ)

## டெங்குக்கு...

சைக்காக அவர் யாழ். போதனா மருத் துவமனைக்கு மாற்றப்பட்டார். எனி னும், சிகிச்சை பலனின்றி நேற்று காலை அவர் உயிரிழந்தார்.

இவரின் மரணத்துக்கு டெங்கு காய்ச்சலே காரணம் என்று மருத்துவ பரிசோதனை அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நம சிவாயம் பிறேம்குமார் மேற்கொண் டார். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# சீன போர்க்கப்பல்களுக்கு நடுக்கடலில் எரிபொருள் நிரப்புவதை நிறுத்துங்கள்!

## இலங்கையிடம் வலியுறுத்தியது இந்தியா

கொழும்பு, நவ. 04

**அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து சீனாவின் போர்க்கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்ப இலங்கை அனுமதித்தமைக்கு இந்தியா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக பல ஆதாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

அம்பாந்தோட்டை துறைமுகமானது சீனப் போர்க்கப்பல்களுக்கு இந்தியா அல்லது அமெரிக்கத் தலையீடு இல்லாமல் எரிபொருள் நிரப்புவதற்கு சரியான தீர்வை வழங்குகிறது என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை கவனத்தில் கொள்ளுமாறு இந்திய அதிகாரிகள் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்காணிப்பைத் தவிர்ப்பதற்காக சீனப் போர்க்கப்பல்கள் துறைமுகத்தைப் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்று இந்தியாவுடன் அமெரிக்காவும் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்த சீனாவின் உதவி தேவைப்படுவதால், இலங்கை ஒரு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளமையும் இதற்கு காரணமாக அமைந்ததாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி என்பது நாட்டின் மாற்று அரசாங்கம்!

*சஜித் பிரேமதாஸ*



கொழும்பு, நவ. 04

ஐக்கிய மக்கள் சக்தி என்பது இந்நாட்டின் மாற்று அரசாங்கம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போது அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் பொறுப்புடன் நடந்து கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அனுமதியின்றி அல்லது பொலிஸாரின் அனுமதியின்றி பேரணிகள் மற்றும் போராட்டங்களை நடத்த முடியாது என்ற கருத்தை முற்றாக மாற்றியமைக்க நேற்றுமுன்தினம் நடந்த போராட்டத்தின் மூலம் முடிந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்று கல்கமுவ யூ.பி.வன்னிநாயக்க தேசிய பாடசாலைக்கு பஸ் அன்பளிப்பு செய்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

போராட்டம் சட்டவிரோதமானது என பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அலுவலகத்துக்கும் பொலிஸார் தனிப்பட்ட முறையில் அறிவித்ததாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த அறிவித்தலை தாம் உள்ளிட்ட எவரும் பொருட்டாகக் கொள்ளவில்லை என்றும் ஜனநாயக ரீதியாக சுயமாக செல்வதற்கும் போராட்டத்திற்கு செல்வதற்கும், போராட்டம் நடத்துவதற்குமுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்க முடிந்தமை நேற்று (நேற்று முன்தினம்) அடைந்த பெரிய வெற்றியாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடங்களுக்கு சுகாதார வசதி

யாழ்ப்பாணம், நவ. 04

கடந்த சில நாட்களாக பெய்த கடும்மழை காரணமாக இடம் பெயர்ந்த மக்களை நேரில் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் மருத்துவர் திலிப் லியனகே, அவர்களுக்கான சுகாதார வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 12 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து காக்கைதீவு மீனவ சமூக மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று முன் தினம் காலை நேரடியாகச் சென்று ஆய்வு செய்ததோடு உரிய சுகாதார வசதிகளை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)



# யாழில் கிணற்றில் இருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 04

அதிகாலையில் வீட்டிலிருந்து காணாமல் போன வயோதிபர் ஒருவர் தோட்டக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் கலட்டி, கரணவாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கலட்டி கரணவாய் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை( வயது-80) எனும் வயோதிபரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் காணாமல்போனதை அடுத்து அவரது உறவினர்களால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிற்பகல் 2 மணியளவில் கரணவாய் பகுதியிலுள்ள கிணற்றில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலத்தை பிரேதப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
Passport அவசியமில்லை
இன்னும் நான்கு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
55'000 விசாக்கள்
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
V2 Travels and Tours Facebook
V2 Travels 0768226240 0768226244

# கிளிநொச்சி பொருளாதார நிலையத்துக்கு இரண்டு அமைச்சர்கள் நேற்று கள விஜயம்



கிளிநொச்சி, நவ. 04

கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் ஆராய அமைச்சர்கள் குழு கள விஜ யம் ஒன்றை நேற்று வியாழக்கிழமை மேற்கொண் டனர்.

இதன்போது கனகபுரம் பகுதியில் அமைந்து ள்ள குறித்த பொருளாதார மத்திய நிலையத்தைப் பார்வையிட்டதுடன், வர்த்தகர்களுடன் கலந்துரையாடினர்.

தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் வர்த்தகர்களுடன் கலந்துரையாடல் ஒன்றையும் அமைச்சர் கள் குழு நடத்தியது.

இந்த விஜயத்தில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அமைச்சர்களின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# எரிபொருள் விலை குறையாது!

கொழும்பு, நவ. 04

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருளை முன்பதிவு செய்யாததன் காரணமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் வரிசைகள் காணப்படுவதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை குறைக்கப்படும் என எதிர்ப்பார்த்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் வாரத்தில் எரிபொருள் விலையை குறைப்பது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அமைச்சர் வலியுறுத்தினார். (அ)

# 335 பயணிகளுடன் இலங்கை வந்த அஸூர் எயார் விமானம்

கொழும்பு, நவ. 04

இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பித்துள்ள ரஷ்யாவின் மிகப்பெரிய தனியார் விமான சேவையான "அஸூர் எயார்" நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. 335 பயணிகளுடன் குறித்த விமானம் இலங்கை வந்ததாக தெரிவிக்கப்பட்டது. அதேபோல், இன்று முதல் இலங்கைக்கான விமான சேவைகளை எயார் பிரான்ஸ் நிறுவனம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

இதேவேளை, சுவிஸ் தேசிய விமான சேவையும் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் இலங்கையில் விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.